12 பக்கங்கள் விலை 50 காசு

நம் நாடு

ஆசிரியர்: மு. கருணாநிதி

"NAM NADU" Official Organtəh of D. M. K.

மலர்-2 | திருவள்ளுவர் ஆண்டு 2010 மாசி - 20 4-3-1979 | இதழ் 24

புனித ராஜ்யம்

காட்சி 19

கலைஞர் கருணாநிதி

(எம். எல் ஏ முருக சாமியின் வீடு:

முருகசாமி, ஆடம்பரமாக அமர்ந்து மது அருந்திக் கொண்டிருக்கிருன்... அவன் வீட்டு அறைக்கதவு பூட்டியிருக்கிறது. அந்தக்கதவைத்தட்டியவாறு உள்ளேயிருந்து சுந்தரி, கூச்சலிட்டுக் கொண்டேயிருக்கிருள்)

சுந்தரியின் குரல்:
இப்ப. கதவைத் திறக்கப் போறீயா இல்லியா?...
தயவுசெய்து கதவைத் திற!

முருகசாமி;
முடியவே முடியாது!... நீ சரின்னு ஒரு வார்த்தை சொல்லு'... அப்புறம் கதவு திறக்கப் படும்.

சுந்தரியின் குரல்:
நான் இந்த அறைக்குள்ளேயே தற்கொலை செய்துகிட்டு செத்துப் போனாலும் போவேன்; உன் இஷ்டத்துக்கு இணங்கவே மாட்டேன்.

முருக: செத்துத்தொலை!... அதனாலே எனக்கு என்ன கவலை? போலீஸ் வந்து விசாரணை நடத்தும் — என்னைத்தொந்திரவு பண்ணும்னு பாக்கிறியா? அதான் நடக்காது! இப்ப நடக்கிறது எங்க ராஜ்யம்! எத்தனையோ அரசியல் படுகொலைகளிலே உண்மையை ஊமையாக்கிட்டு, பொய்யை ஊர்லஉலாவவிட்டிருக்கோம். நீஎன்ன சாதாரணம்; சுண்டைக்காய் இதோ பார் சுந்தரி!... ஒரே ஒரு நல்ல வார்த்தை சொல்லு' உன்னை அப்படியே குபேரன் மனைவியா ஆக்கிக் காட்டுகிறேன்.

சுந்தரியின் குரல்:
மனைவியா? உனக்கா? அதை மறந்துடு! நடக்கவே நடக்காது!

முருக: பரவாயில்லை: மனைவியா வேண்டாம் ஒரு நாள் மஞ்சத்து ராணி!... என்ன சொல்றே?... ஒன்று மட்டும் மறந்துடாதே! இந்த முருகசாமி நினைத்தால் அதை முடிக்காமல்விட மாட்டான். போனால் போவுது, பூவைக் கசக்கி முகரக்கூடாதுன்னு பாக்கிறேன்.

(அப்போது அண்ணாச்சி, நொண்டி பொடியன் மூவரும் வருகிருர்கள்)

அண்ணாச்சி:
வணக்கம் எம் எல், ஏ, சார்,...

முருக: வாங்கப்பா வாங்க!... இப்பத்தான் போன்ல பேசினீங்க? அதுக்குள்ளே வந்துட்டீங்க?

அண்ணாச்சி: போனு?

நொண்டி: நாங்க பேசினேமா?

முருகசாமி: என்னடா நடிக்கிறீங்க?... நீ தானே என்கிட்ட பேசினே! அட்ரஸ்கூட மறந்துப் போச்சுன்னே! பாலம்மாகிட்ட கேளு கொடுப்பான்னு சொன்னேன்! ஒரு வேளை என்னுட்டம் பகல்லேயே'சுதி,ஏத்திகிட்டிங்களா?

நொண்டி: சுதி ஏத்திகிட்டது நிஜம்தான் ஆனு போன்ல பேசினது ஞாபகமில்லியே!... ஏன் அண்ணாச்சி! நீங்க பேசினீங்களா?...

அண்ணாச்சி: 'பசினாலும் பேசியிருப்பேன்!... அது கிடக்கட்டும் — எம். எல், ஏ. சார்... என்ன இன்னைக்குவெளியிலே எங்கேயும் போகலியா? இப்பவே தீர்த்தம்சாப்பிட ஆரம்பிச்சுட்டீங்க!

முருகசாமி; ஏன்; தீர்த்தம் சாப்பிட்டு வெளியில போனாஎன்னடா? யாரு கேக்க முடியும்என்னை? இப்ப ஏன் இதைச்சாப்பிடுறேன் தெரியுமா?... அந்தச் சுந்தரி ரொம்ப அடம்பிடிக்கிருள்! அவளை அடக்கி மடக்க பலம் வரவழைச்சுக்கிறேன்.

அண்ணாச்சி: சுந்தரியா? அவள்எங்கே இருக்கா?

முருகசாமி: என்னடா போன்ல சொன்னேனேடா! விடிய மட்டும் ராமாயணம்கேட்டுட்டு சீதைக்குராமன் என்னு முறைன்னு கேட்கிறியே!

அண்ணாச்சி: அப்படியா? என்கிட்டயா சொன்னீங்க? சரி சொன்னதாகவே இருக்கட்டும் இன்னொரு தடவை சொல்லுங்க!

முருகசாமி: தப்பிச்சு ஓடிய தங்கச் சிலை சுந்தரி இங்கேதான் இருக்கா! இதோ இந்த அறையிலேதான் பூட்டிப் போட்டிருக்கேன். அவள் சம்மதம்னு சொல்ற வரையிலே கதவைத் திறக்க முடியாதுன்னு கண்டிப்பா உத்திரவு போட்டிருக்கேன்...

(வேகமாக வேலன் வந்து கொண்டே)

வேலன்! உன் உத்திரவை உடைத்தெறிய இதோ வந்துவிட்டார் சுந்தரம்!...

முருகசாமி: யார்?யாருடா நீ?...

[சுந்தரம் கம்பீரமாக வருகிருன் உள்ளே)

சுந்தரம்; நாங்கள் உங்களை நாட்டுக்கு அடையாளம் காட்டும் ஆட்கள்! எங்கள் கைகள் உங்கள் மீது விளையாடுவதற்கு ஆரம்பிப்பதற்குள், சுந்தரியை மரியாதையாக விடுதலை செய்து விடுங்கள்!

முருகசாமி: முட்டாள்களே! புலியின் குகைக்குள்ளே புகுந்து சேட்டை செய்யும் எலிக்குஞ்சுகள் நீங்கள்...

சுந்தரி: எங்கேயோ படித்த பழையவசனம் - பரவாயில்லை நன்ருக மனப்பாடம் செய்திருக்கிருய்... மிஸ்டர் எம்,எல்.ஏ.... வீண் தகராறு செய்யாமல் மரியாதையாகசுந்தரியை என்னிடம்ஒப்படைத்துவிடு .. இல்லாவிட்டால்...

முருகசாமி: இல்லாவிட்டால் என்ன நடக்கும்? போலீஸ் படை வந்து

(2-ம் பக்கம் பார்க்க)

/ΛΙ /

புனிதராஜ்யம்...

(முதற்பக்கத் தொடர்ச்சி)

என்னைக் கைது செய்யுமோ?...

சுந்தர: அதெல்லாம் வராது என்று எனக்கு நிச்சயமாகத் தெரியும். இப்போதெல்லாம் போலீஸ் அதிகாரிகள் மக்களைப் பாதுகாப்பதற்குப் பதிலாகத் தங்களை உன்னைப்போன்றவர்களிடமிருந்து பாதுகாத்துக் கொண்டால் போதுமென்று நினைக்கிறார்கள். எனவே போலீசைத் துணைக்கு அழைக்க நான் அவ்வளவு முட்டாள் அல்ல! உன்னைப்போன்ற உன் மத்தர்கள் — இதோ நிற்கிறார்களே; ஊர்த் தாலியறுப்பவர்கள் — எல்லோரையும் தட்டிக் கேட்க இப்போது மக்கள் சக்தி திரள ஆரம்பித்துவிட்டது!... அந்தச்சக்தியின் வேகத்தில் நீங்கள் சல்லடைக் கண்ணாகத் துளைக்கப் படுவதற்கு முன்... திருந்திக்கொண்டு குற்றத்தை ஒப்புக் கொள்ளுங்கள்... எங்கே என் சுந்தரி?...

(அறைக்குள்ளிருந்து சுந்தரியின் குரல் 'அத்தான்'' என்று உரக்க ஒலிக்கிறது)

சுந்தரம்: சுந்தரி! ... நீ இங்கேயா இருக்கிறாய்? (எனக் கேட்டவாறு சுந்தரம், கதவருகே செல்கிறான்) சுந்தரத்தை, முருகசாமி தடுத்து நிறுத்துகிறான். இருவருக்கும் கைகலப்பு ஏற்படுகிறது... அண்ணாச்சி நொண்டி, பொடியன் மூவரும் சுந்தரத்தைச் சுற்றிக் கொண்டு சோடாபாட்டில்களை அவன் தலைக்கு நேராக ஓங்குகிறார்கள்..

சுந்தரம்: வேலா! [என்கிறான். அப்போது வேலன் வெளியே ஓடுகிறான்]

முருகசாமி: ஹ ஹ ஹ! துணைக்கு வந்தவன் தொடை நடுங்கி ஓடுகிறான். நீயும் மன்னிப்புக்கேட்டுக் கொண்டு மரியாதையாக ஓடிவிடு'..

(வெளியே ஓடிய வேலன், நூற்றுக் கணக்கான மக்களுடன் அங்கே திரும்ப வருகிறான்)

வேலன்: நான் ஓடவில்லையடா முட்டாளே! இதோ இந்த மக்களுக்கு நீங்கள் செய்யும் அட்டூழியங்களை எடுத்து விளக்கி அவர்களை அழைத்து வந்து உன் வீட்டு வாசலில் நிறுத்திவிட்டுத்தான் நாங்கள் முதலில் வந்தோம்!...

(முருகசாமியும் அவன் கூட்டாளிகளும் திகைப்புற்று நிற்கிறார்கள்)

சுந்தரம்: இப்போது என்ன சொல்கிறாய்? உங்கள் பொல்லாத செயல்களைப் பொறுத்துக் கொண்டு போலீஸ் தூங்குவதுபோல் இருக்கலாம்! ஆனால் இதோ பொதுமக்கள் விழித்துக்கொண்டார்கள்!... இவர்கள் இப்போது உங்களைச் சுற்றிவளைப்பார்கள்! உங்கள் சூழ்ச்சிகளை அம்பலமாக்குவார்கள்.

(மக்கள் முருகசாமியையும் அண்ணாச்சி நொண்டி பொடியன் ஆகியோரையும் சுற்றி வளைத்துக் கொண்டு நிற்கிறார்கள்..

சுந்தரம்: உம்!... இந்த அறைச்சாவியை எடு முருகசாமி நடுங்கிக் கொண்டே கொடுக்கிறான் சுந்தரம் கதவைத் திறக்கிறான். சுந்தரி ஓடிவந்து சுந்தரத்தை 'அத்தான்' என்றவாறு தழுவிக் கொள்கிறாள்]

சுந்தரம்:

[பொது மக்களைப் பார்த்து] பெரியோர்களே! தாய்மார்களே நல் இளம் சிங்கங்காள் புரிகிறதா இந்தப்புனித ராஜ்யத்தின் மகிமை இப்படி ஒரு நிகழ்ச்சியல்ல நாட்டில் நித்த நித்தம் நடக்கிற இது போன்ற நிகழ்ச்சிகளை எழுத ஏட்டில் இடமில்லை இதோ இந்த எம். எல். ஏ. உட்பட நால்வரையும் நாமே, போலீஸ் அதிகாரியிடம் அழைத்துச்செல்வோம்! நடந்த அக்கிரமங்களைச் சொல்வோம் நமது சக்தியைக் கண்ட பிறகாவது போலீசார் நியாயத்துக்கும் – நேர்மைக்கும் — கடமைக்கும் — கட்டுப்பட்டே ஆகவேண்டும்! நாம் செய்யும் இந்தக் காரியம், காவல்துறைக்கு உதவியாகத்தான்! இதுபோன்ற கயவர்கள் எங்கிருந்தாலும், அவர்களை இனிமேல் மக்கள் சக்திதான் உலகிற்கு அடையாளம் காட்ட வேண்டும்! இன்று அநீதியின் கொடி. ஆகாயமளாவப் பறக்கலாம்! விரைவில் நீதியின் கொடி நீலவானத்தை அழகுபடுத்தத்தான் போகிறது... ஏமாந்த காலத்தில் ஏற்றம் கொண்டோர் புலிவேஷம் போடும் நாடகத்தை நாடு உணர்ந்து விட்டது... விரைவில் இருள்மறையும் உண்மையின்ஒளி தோன்றும்'... கீழ்வானில் உதய சூரியன் நகத்தகாயமாகத் தோன்றும்!... அதுவரையில் இந்தக் குணக்கேடர்களை மக்கள் மத்தியில் அடையாளம் காட்டுவதே என் வேலை'...

(திரை விழுகிறது)

(நாடகமும் முடிகிறது)

ஒற்றுமை ஓங்க...!

வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு தீர்மானத்தை கழக நாடாளுமன்ற உறுப்பினர் திரு. முரசொலி மாறன் அவர்கள் பிப்ரவரி — 23-ம் நாளன்று மாநிலங்களவையில் தாக்கல் செய்துள்ளார். பல்வேறு மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்டு பல்வேறு இனத்தார் வாழும் இந்தியத்துணைக் கண்டத்தில் அந்தத் தீர்மானம் வெகு விரைவில் செயல்படுத்தப்பட வேண்டிய ஒன்றாகும்.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன் பேரறிஞர் அண்ணா அவர்கள் இதே மாநிலங்களவையில் "என்னுடைய தாய் மொழியாகிய தமிழ் மத்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக ஆகிற தகுதியைப் பெறும் வரையில் நான் திருப்தியடையமாட்டேன்'' என்று முழங்கினார்கள். அண்ணாவின் அந்த எண்ணத்தை – கனவை நினைவாக்கத்தான் அவரது அருமைத் தம்பி தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் திருச்சியிலே டிசம்பர் 23. 24 தேதிகளில் இந்தி எதிர்ப்பு மாநாட்டினைக் கூட்டி ஒரு சிறப்புமிகு தீர்மானத்தை – பல லட்சக் கணக்கான தமிழ்ப் பெருங்குடி மக்களின் முன்னே நிறைவேற்றினார்கள், அந்தத் தீர்மானத்தின் ஒரு வடிவமாகத்தான் மாநிலங்கள் அவையில் இத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை தாக்கல் செய்து மாறன் அவர்கள் ஒரு மணி நேரம் உரையாற்றியுள்ளார்

திரு. என் ஜி. ரங்கா ஒரு திருத்தத்தை இத் தீர்மானத்திற்கு அளித்துள்ளார் அவரது திருத்தத்தின்படி தமிழ்மொழியோடு, தெலுங்கு கன்னடம். மலையாளம் ஒரிய மொழி வங்காளமொழி – ஆக மொத்தம் ஆறு மொழிகளை உடனே மத்திய அரசு ஆட்சி மொழியாக அறிவிக்க வேண்டும் என்பதே.

மேலும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் ஹரிகிஷன் கிங்சூஜித் எம். பி. யும் உஞ்சச்சன் எம். பி. யும்— ஒரு திருத்தத்தை அளித்துள்ளார்கள். அத்திருத்தத்தில் "எல்லா தேசிய மொழிகளையும் நாடாளுமன்றத்தில் வழங்கிவர அனுமதிக்கக்கோரியும் நிறைவேற்றப்படுகிற சட்டங்களின் மொழி பெயர்ப்புகள் எல்லாத் தேசிய மொழிகளிலும் உடனடியாகக் கிடைக்கச் செய்யக் கோரியும். எல்லா தேசிய மொழிகளையும் நிர்வாக மொழியாக அறிவிக்கக் கோரியும் கூறப்பட்டுள்ளது.

ரவி. பி எஸ்.சி.(பிால்)

இவ்வாறு பல கட்சிகளைச் சார்ந்தவர்களும் ஏற்றுக் கொண்டு, "அதோடு இதையும் சேர்த்துக் கொள்ளுங்கள்' என்று கூற முடிகிற அளவில் தான் மாறனின் தீர்மானம் உள்ளது அந்த அளவிற்கு மத்திய அரசால் இந்தி திணிக்கப் படுகிறது என்பது உண்மையாகிறது; ஆகவே அண்மையில் சென்னையில். பிரதமர் 'இந்தி கட்டாய மொழியாக ஆக்கப்படவில்லை'' என்று கூறியது பொய்யே!

இந்திரா அம்மையாரால் அவசர நிலைமை நாட்டில் அறிவிக்கப்பட்ட பின்பு. மத்திய உள்துறை அமைச்சகத்தில் "ஆட்சி மொழி இலாகா'' என்ற ஒரு தனி இலாகா ஏற்படுத்தப்பட்டு இந்தி மொழி அனைத்துத் துறைகளிலும் புகுத்தப்பட்டது நாடறிந்த உண்மை! அந்தப் பணியையே இன்றைய பிரதமர் மொரார்ஜி தலைமையிலுள்ள ஜனதா அரசாங்கமும் தொடர்ந்து அதிவேகத்துடன் செய்து வருகிறது. மேலும் நம்முடைய பிரதமருக்கு 'தேச பக்தி' என்ற சொல்லுக்கு பொருள் புரியாமல் போகும் அளவிற்கு –'தேசபக்தன் ஒவ்வொருவனும் இந்தி படிக்க வேண்டும்'' என்று கூறுமளவிற்கு நிலைமை மோசமடைந்து வருகிறது.

ஒரு வாதத்திற்கு இந்தியை ஆட்சி மொழியாக்குகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம் அப்பொழுது இந்திமொழிக்கு ஒரு தனித்தகுதி, மற்றமொழிகளைவிட ஒரு உயர்ந்த இடம் கிடைக்கும். ஆக இந்திமொழிக்கு ஒரு அதிகாரம் கிடைக்கும். அப்படியே இந்திமொழி பேசுவோருக்கும் அதிகாரம் கிடைக்கும். அதன் மூலம் இந்தி மொழி பேசுவோர் மற்ற தேசிய மொழிகளைச் சார்ந்தவர்களை அடிமைப் படுத்த முடியும். இதை எப்படி மற்ற தேசிய மொழிக்காரர்களால் சகித்துக் கொள்ள முடியும்?

நம்முடைய எண்ணம் நம் தமிழை மட்டும் ஆட்சிமொழியாக்கி மற்ற மொழிக்காரர்கள்மீது தமிழைத் திணிக்க வேண்டுமென்பது அல்ல: எல்லா தேசிய மொழிகளும் ஆட்சி மொழியாக்கப்பட்டு அனைவரும் சமமாக நடத்தப்பட வேண்டும் என்பதே! இதைத் தெளிவுபடுத்தவே மாறன் அவர்கள் மற்ற உறுப்பினர்களைப் பார்த்து மேற்கண்டவாறு கூறியுள்ளார். அத்துணை வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானம் மத்திய அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும் என்பதே இந்தியத் துணைக் கண்டத்தில் ஒற்றுமையை விரும்புபவர்களின் எண்ணமாக இருக்கிறது,

ஆகவே இந்தியத் துணைக் கண்டத்தில் ஒருமைப்பாடு தழைத்தோங்க ஒற்றுமை நிலைக்க மத்திய அரசு உடனடியாக நாடாளுமன்ற மாநிலங்களவையில் முரசொலி மாறன் அவர்கள் தாக்கல் செய்துள்ள தீர்மானத்தை இப்பொழுதே பரிசீலித்து உடனே நடைமுறைப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

'மாமூல்' மன்னர்கள் நடத்தும் 'சைடு பிசினஸ்'!

ஆந்திர மாநில சட்டமன்ற உறுப்பினரான என். எஸ். என் ரெட்டி என்பவர். அண்மையில் வெளியிட்டுள்ள ஒரு தகவல் எல்லோரையும் 'திடுக்கிட' வைக்கிறது.

சட்டம், ஒழுங்கைப் பாதுகாத்து குற்றங்களைக் களைய வேண்டிய காவல்துறையைச் சேர்ந்த சிலர் விசாகபட்டிணத்தில் 'சைடு பிசினஸ்' செய்து வருகிறார்களாம் என்ன 'பிசினஸ்' தெரியுமா?

தங்கள் மேற்பார்வையின்கீழ் அவர்கள் விபச்சார விடுதியையும், 'பிக்பாக்கெட்' குழு ஒன்றையும் 'திறம்பட' நடத்தி வருகிறார்களாம்

இந்த வியாபாரத்தினால் விசாகபட்டினத்திலிருக்கும் ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் மாதமொன்றுக்கு ஏறத்தாழ ஐந்தாயிரம் ரூபாய் மாமூலாகக் கிடைக்கிறதென்ற தகவலையும் அந்தச் சட்டமன்ற உறுப்பினர் வெளியிட்டுள்ளார்.

காவல்துறையினரின் இந்த ஒழுங்கீனங்கள் குறித்து விரிவான தகவல்களைச் சேகரித்து காவல்துறை மேல் அதிகாரியான ஐ. ஜி யிடம் தந்துள்ளார் அந்தச் சட்டமன்ற உறுப்பினர்.

வள்ளல் வழங்குகிருர்

வாக்குறுதிகள் !



மிசா- இரத்தினம்

இராதாபுரம் உளிவீச்சு - விசாரணை உண்டா?

— தக்க நடவடிக்கை எடுக்கப்படும்!

திருவைகுண்டத்தில் காவல் நிலையத்தில் கற்பழிப்பு, நடவடிக்கை உண்டா?

— ஆவன செய்யப்படும்!

'காரைக்குடியில் பாலம்மாள் கற்பழிப்பு என்ன செய்திருக்கிறீர்கள்?

— விசாரிக்கப்படும்!

மதுரை அ, தி, மு. க சட்டமன்ற உறுப்பினர் போதையில் ஒரு பெண்ணை இழுத்தாரே, என்ன நடவடிக்கை?

— விசாரிக்கப்படும்;

சின்னமனூரில் ஒச்சாதேவர் காவல் நிலையத்தில் பிணமாக்கப்பட்டாரே! என்ன செய்தீர்கள்?

— சட்டம் தன் கடமையைச் செய்யும்

பழனியில் இப்ராகீம் கொல்லப்பட்டார், அவர் மனைவி ஜென்னி உன்னிசா கற்பழிக்கபட்டார். இந்தக் கொடுமைக்கு என்ன நடவடிக்கை?

— சட்டம் தன் வேலையைச்செய்யும்!!

பழனியில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் அ. தி. மு, க, தொண்டனே கண்பார்வை இழந்தானே என்ன செய்தீர்கள்?

— வருத்தப்படுகிறேன், விசாரிக்கப்படும்

தூத்துக்குடியில் ஜோசப் மகள் மேரி ஆயுதப்படையினரால் கற்பழிக்கப்பட்டார் நடவடிக்கை உண்டா?

— சட்டம் உற்றுப் பார்க்கிறது!

மதுரையில் இதயக்கனி மன்றத்தைச் சேர்ந்த உங்கள் அமைப்பாளர் மதகு அணையருகே பணத்திற்காக இளைஞர் ஒருவரைக் கொன்ருர்எனத் தெரிகிறது. என்ன செய்தீர்கள்?

— அடலேறுக்கு ஆழ்ந்த அனுதாபங்கள் விசாரிக்கப்படும்!

மதுரை அரசு மருத்துவமனையில்பெண்டாக்டரிடம் உங்கள் கட்சிக்காரர் தகாத முறையில் நடந்து கொண்டார், என்ன செய்தீர்கள்?

— விசாரணை செய்யப்படும்!

மேட்டூர் தேசியப் பஞ்சாலைத் தொழிற் சங்கத் தலைவர் சாமுவேல் கொல்லப்பட்டார்! என்ன நடவடிக்கை?

— சட்டம், வேலையைச் செய்யும்!

நாகர்கோவிலில் வேலாயுத நாயர் மகன் ஓட்டல் அறையிலே பிணமாக்கப்பட்டார் விசாரணை எங்கே?

— பார்த்துக் கொண்டிருக்கிறோம்!

திருவில்லிபுத்தூரில் தி. மு க. மாணவப் பேச்சாளன் இளஞ்செழியன் கொல்லப்பட்டான் கொலை வழக்கு செக்சன் போடப்பட்டும் நடவடிக்கையில்லை. எப்போது?

— மாவட்டக் கலெக்டரேஎங்கள் அமைப்பாளராக இருந்து அறிக்கைவிட்டார், விசாரிக்கப்படும்!

மதுரையில் மாணவர்களை மாடியிலிருந்து அ. தி, மு. க. குண்டர்கள் தூக்கி எறிந்தார்கள் என்ன விசாரணை?

— ஆவன செய்யப்படும்.

சென்னை இராயபுரம் பகுதியில்பதின்மூன்று வயதுச் சிறுமி கற்பழிக்கப் பட்டாள். என்ன செய்தீர்கள்?

— சட்டம் சரி பார்க்கும்!

'முருகையன் கொலை என்ன செய்தீர்கள்?

— சட்டம் கடமையைச் செய்யும்!

தி. மு. க தோழன் பாங்கோ ஆறுமுகம் இறந்தபின்னும் இடுகாட்டிற்கு நிம்மதியாகப் பயணம் செய்ய முடியவில்லை. பிணத்தையும், அ. தி. மு. க. குண்டர்கள் இழுத்துச் சென்ருர்கள். என்ன செய்தீர்கள்?

— விசாரிக்கப்படும்!

தொழிற்சங்கத் தலைவர்கள் தங்கமணி கோபு தாக்கப்பட்டார்கள். என்ன விசாரணை நடத்தியிருக்கிறீர்கள்?

— நியாயம் பரிசீலிக்கப்படும்.

'புட்லூர் தண்டபாணி அ. தி. மு. க. சட்டமன்ற உறுப்பினரால் உயிர்பறிக்கப் பட்டுள்ளான் என்று தெரிகிறது. கிணத்துக் கடவு சட்டமன்ற உறுப்பின்ர் கந்தசாமி காவல் நிலயத்தில் புகுந்து கலகம் விளைவித்தார், கோவை மருத்துவமனையில் விவகாரம் முற்றி பெரிய வேலை நிறுத்தம் நடத்துகிற அளவுக்குக் காரணமாக இருந்தார். என்ன நடவடிக்கை?

'சட்டம் தன் வேலையைச் செய்யும்!

'சைதை தொகுதி தி. மு. க. சட்டமன்ற உறுப்பினர் புருஷோத்தமன் காவலர்கள் கண் எதிரில் அ.தி,மு க. குண்டர்களால் தாக்கப்பட்டார். தி. மு. க சட்டமன்ற உறுப்பினர் இராசரத்தினம் வீட்டில் புகுந்த குண்டர்களால் தாக்கப்பட்டார். என்ன செய்தீர்கள்?

'சட்டம், பார்த்துக் கொண்டிருக்கிறது!'

'கற்பழிப்பு, அராஜகம் கள்ளச்சாராயம் கொலை கொள்ளை — எத்தனையோ கொடுமைகள் இந்த ஆட்சியில்! இதுவரை என்ன செய்திருக்கிறீர்கள்?' 'விசாரிக்கப்படும்'

சட்டம் பார்த்துக் கொள்ளும்!

'அதுசரி வாத்தியாரே! அத்தனையும் விசாரிக்கப்படும் சட்டம் பார்த்துக் கொள்ளும் என்று சொல்கிறீர்களே! எதுவுமே விசாரிக்கப்படவில்லை, எந்த நடவடிக்கையும் இதுவரை இல்லை!

இது ஏன்?

அதுவும் விசாரிக்கப்படும்!

நீங்கள் சொல்வது உறுதிதானு?

— அதுவும் பார்க்கப்படும்!

மூளை குழம்பு ரது. முதல்வர் கீழ்ப்பாக்கம் நோக்கிப் புறப்படுகிருர்.

நம் நாடு
ஆசிரியர்: மு. கருணாநிதி

சந்தா விவரம்

ஓராண்டு சந்தா ரூ. 26-00

ஆறுமாத சந்தா ரூ. 13-00

ஆறு மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

பெரிய இடம்

சின்னபுத்தி!

கொள்ளைக்கு வாய்திறப்பதும் —
கடிவாளத்துக்கு வாய்மூடுவதும்
பாம்புக்குத் தலையைக் காட்டுவதும்—
மீனுக்கு வாலைக் காட்டுவதும்
போன்ற 'விலாங்கு' மனம் படைத்தவர்
எம். ஜி. ஆர்!
கலைஞரின் குணத்தால்

பகைவர்களும் நண்பர்களாகிறார்கள்!
எம். ஜி. ஆரின் கோணல் நடத்தையால்
நண்பர்களும் பகைவர்களாகிறார்கள்!

ஒருவர் எங்கே அமர்ந்திருக்கிறார், அதுவல்ல பிரச்சினை. எப்படி நடந்துகொள்ளுகிறார்—எப்படி பேசுகிறார் — எத்தகையது அவர் அணுகுமுறை அதைக்கொண்டே அவர் அமர்ந்திருக்கிற இடத்திற்கு மதிப்பு மரியாதைகிடைக்கும். அமர்ந்திருக்கும் நாற்காலிக்கு முன்னே இருந்த மதிப்பு மேலும் உயரும்.

தமிழகத்தைப் பொறுத்த வரை எத்தனையோ பேர் முதல்அமைச்சர் நாற்காலியில் அமர்ந்திருக்கின்றனர். அப்படி அமர்ந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் சிலரே.

அண்ணா முதல் அமைச்சர் பொறுப்பேற்பதற்கு முன்னாலே, முதல்அமைச்சர்களாக இருந்தவர்களெல்லாம் தேசியம்பேசி உழைக்கிற மக்களையும் உழைக்காதவர்களையும் வளமுள்ளபூமியையும்வறண்ட பிரதேசங்களையும் இணைத்து இணைத்து தேசிய அளவில் பஞ்சத்தையும் பற்றாக்குறையையும் வளர்த்து வந்தனர். நீங்கள் உழைக்கிறீர்கள் நல்லது, வளமுள்ள பூமி தமிழ்நாடு. ஆனால் பீகார் அப்படி இல்லை — வறண்ட பிரதேசம் — உழைப்போர் இல்லை, ஆதலின் அவர்கள் தேவையை பூர்த்தி செய்திட நீங்கள் உங்கள் தேவைகளை தியாகம் செய்திட வேண்டும் என்று கூறி விடுதலை பெற்று 30 ஆண்டு ஆகியும் இது ஏழை நாடு. எளிமை, சிக்கனம், தியாகம் என்று கூறி காலத்தை கழித்தனர், வாழ்வு உயராதா? வளம் பெருகாதா? உழைத்துப் பயனில்லையே என்று சோர்ந்த நிலையில் மக்கள் இருந்தனர். வாழ்வில் முன்னேற்றம் — உழைப்பில் நம்பிக்கை — உணர்வுகளுக்கு மதிப்பு இவைகளெல்லாம் கேள்விக்குறியாகவே இருந்தது. செழிப்பு மிக்க தமிழ்நாட்டில்ஒரு உணவுப்பஞ்சமே வந்துற்ற நிலை. இந்தச் சூழ்நிலையில்தான் பேரறிஞர் அண்ணா அவர்களிடம் தமிழகத்து மக்கள் ஆட்சியை ஒப்படைத்தனர். அறிஞர் அண்ணா அவர்கள் மிக எச்சரிக்கையோடு பொறுப்பேற்றார்.

ஏழை எளியவர்கள் நடுத்தர மக்கள் உழைக்கிற வர்க்கம் சிறு வியாபாரிகள் நெசவாளர்கள் முதலானோர் தங்கள் உழைப்பிலே ஒரு நம்பிக்கை பெற்றனர். விடுதலைக்கு பாடுபட்ட தியாகிகள், விடுதலைக்கு வித்திட்ட கவிஞர்கள் மதிக்கப்பட்டனர். பாராட்டப்பட்டனர். எல்லார்க்கும் எல்லாம் என்ற நிலை வந்தது ஏழை சொல் அம்பலமாகிற காலம் இது தமிழர்களின் பொற்காலம் இது. என்று மக்கள் போற்றிப் புகழ்ந்தனர்

அறிஞர் அண்ணாவுக்குப் பிறகு கலைஞர் முதல்வர் பொறுப்பேற்றார். அறிஞர் அண்ணா அவர்கள் விட்டுச் சென்ற பணியினை திட்டங்களை தொடர்ந்து நடத்திட்டார். சமுதாய சீர்திருத்தம், பேருந்துகளை நாட்டுடைமையாக்குதல், ஏழை எளியவர்கள் உயர்ந்திட பல்வேறு திட்டங்கள், குடிசை மாற்று வாரியம் வடிகால் வாரியம், மின் வாரியம் அமைத்து அதன் மூலம் பல்வேறு நற்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. கண்ணிழந்தோர். ஊனமுற்றோர், தொழு நோயாளிகள், கைம்பெண்கள், அனாதை, ஆதர

ஜி. சுப்பிரமணியம்

வற்றோர் உயர்ந்திட திட்டம் இயற்றி விரைந்துசெயலாற்றினார். விவசாயிகள், தொழிலாளர்கள் இப்படி பல்வேறு பிரிவினர்கள் பயனடையும் வகையில் செயல்பட்டது கலைஞர் தலைமையிலான கழக அரசு. கல்வியில் முன்னேற்றம், தொழிலில் முன்னேற்றம், உழைப்பவர்களுக்கு பாதுகாப்பு மேலும் பழங்காலப் பண்பாடுகள், கலாச்சாரங்கள், மொழி இனம் காக்கப்பட்டது. மத்தியில் இருப்பவர்கள் மற்ற மாநிலத்து பெரியவர்கள் அத்தனை பேரும் பாராட்டிடும் வகையில் முதல்வர் கலைஞர் தன்னுடைய பணியை தொய்வின்றி தொடர்ந்து செய்தார்.

சனநாயகத்துக்கு ஆபத்து-உரிமைகள் பறிக்கப்படுகிறது உணர்வுகளை மழுங்க வைக்கிறார்கள். இந்த அநீதியை நாட்டைக் காக்க வேண்டிய தலைமை அமைச்சரே செய்கிறார்—மாநிலத்தை காக்க வேண்டிய மத்திய அரசே இந்த இழி நிலைக்கு காரணமாக இருக்கிறது என்றதும், சனநாயகத்தை காத்திட சர்வாதிகாரத்தை ஒழித்திட போர்க்குரல் கொடுத்து சனநாயகத்தை மீட்டுத் தந்த பெருமை கலைஞருக்கு, கழக அரசுக்கு உண்டு. உறுதி மிக்கத் தலைவர்—உணர்வுள்ள முதல்வர். வெறும் பதவிக்கு தன்னுடைய நாட்டை, மக்களை காட்டிக் கொடுக்கும் இழி நிலை கலைஞருக்கு இல்லை மக்களின் நலன் காக்கிற அமைச்சர் இவரன்றோ! இவரின் தொய்வில்லாத பணியின் மூலம் நிரூபித்துவிட்டார் என்று போற்றி புகழாதார் இல்லை. அநியாயங்கள் எத்தனை தலை தூக்கிடினும் கவலையில்லை ஆட்சி இருந்தால் போதும். அமைச்சர் பதவி இருந்தால் போதும் மத்தியில் ஆள்வோரின் தயவு இருந்தால் போதும் என்ற இழிநிலைக்கு தன்னை ஆளாக்கிக் கொள்ளாமல் தன்னுடைய எண்ணங்களை வெளியிட்டார். தமிழ் சமுதாயத்தின் நலன் கருதி தூக்கு மேடை ஏறிடவும் தயார் என்று சூளுரைத்தார். தான் காட்டுகிற எதிர்ப்புக்கு தண்டனை எதுவாக இருக்கும் என தெரிந்திருந்தும் நாட்டு நலனே முக்கியம், நாட்டு மக்களின் உரிமையை விற்றிட நான் சம்மதியேன் இதைக் கழகம் அனுமதிக்காது என்றார் கடின உழைப்பால் சனநாயகம் பிழைத்தது. ஆனால் சனநாயகத்தை காத்திடும் போரில் கழகம் தாக்குண்டது. சிறையும் சித்திரவதையும் போதாதென்று பல்வேறு பொய் குற்றச் சாட்டுக்கள் இழி மொழிகள் பழிச் சொற்கள் ஏளனங்கள் அத்தனையும் பரிசுப் பொருளாக கழகத்துக்குக் கிடைத்தது. நல்லது செய்து விட்டு கூலிகேட்போர் சில பேர்—நல்லதே செய்யாமல் கூலி கேட்டு கையேந்தும் விலங்கு மனங் கொண்டோர் சில பேர். ஆனால் கழகமோ நல்லது செய்துவிட்டு அதன் மூலம் கிடைத்திட்ட இன்னலை இடுக்கண்களை சிரித்த முகத்தோடு ஏற்றது. அப்படி துன்பத்தை பரிசுப் பொருளாகப் பெற்றவர்தான் இன்றைய எதிர்கட்சித் தலைவர்!

சனநாயகத்துக்கு சாவு மணி அடித்த நேரத்திலெல்லாம் மணியோசை தொடர்ந்து கேட்டிட வேண்டும்என்று விரும்பியவர் புது வேஷம் போட்டு புத்தனாக மக்களிடத்தில் நடித்தவர்தான் இன்று முதல்அமைச்சர் நாற்காலியில் அமர்ந்திருக்கிறார்.

யார் யார் எம். ஜி ஆர். நடிப்பைப் புகழ்ந்து தட்டிக் கொடுத்தார்களோ, யார் யார் எம். ஜி. ஆரை ஆட்சிக் கட்டிலில் அமர்த்திட ஓடி ஓடி உழைத்தார்களோ, அவர்களெல்லாம் இன்றைக்கு எம். ஜி. ஆர். ஆட்சியைப் பார்த்த பிறகு அவரின் அணுகு முறையைக் கண்ட பிறகு தங்களுடைய ஆதரவினை நிறுத்தியதோடு அல்லாமல், கண்டனக்குரலும் கொடுக்கிறார்கள்.

பெரிய இடம்தான் முதல்

(தொடர்ச்சி 9- ம் பக்கம்)

சிந்தனைச் ★★★0★★★ ★★★0★★★ ★★★★★★★ ★★★★★★★ சதுக்கம்

வீணையை மீட்டும் போதும் மலர்களை நுகரும் போதும் மிகவும் மென்மையான உணர்வுகளில் இதயங்கள் மிதக்க வேண்டும்.

●

கிராமத்தானை ஏன் ஏளனமாகப் பார்க்கிறீர்கள்? சோறுபோடும் சாதாரண விசயத்திற்குச் சொந்தக்காரன் அவன், என்பதாலா?

●

ஏமாற்றம் என்ற சொல்லை எடுத்து விட்டால் எத்தனையோ கதைகள் கிடைக்காமல் போய் விடும். அப்புறம் உலக மேடை உப்புச் சப்பற்ற நாடகங்களைத்தான்காண முடியும்.

●

வாழ்வின் எல்லா கரைகளையும் கண்டு பின்னர் அவன் உதவாக் கரையானான்.

●

எனது தோல்விகளுக்கு நானே காரணம்; எனது வெற்றிகளுக்கு நானும் ஒரு காரணம்!

●

வாழ்க்கையை நேரில் தரிசிக்காத இளமைப் பருவம் புரட்சி மனப் பான்மையை ஏற்கிறது, வாழ்வில் நேரடியாக நடக்கத் தொடங்குகிற நடுப்பருவம் பிரச்சினைகளையே சந்திக்க முடிகிறது. கடைசிப் பருவம்- கண்டுவந்த கனவுகளையும் நடவடிக்கைகளையும் ஜீரணித்தும் ஜீரணிக்க முடியாமலும் தவிக்கிறது.

●

பிறர் அழும்போது, ஒருவன் சிரித்தால் பைத்தியம்என்று கருதுகிறாய்? பைத்தியக்காரா!—

வானம் அழுதபோது உழவர்கள்சிரித்தார்கள்; வயல்வெளிகளில் பயிர்கள் பைத்தியம் பிடித்து காற்றோடு குலுங்கிச்சிரிப்பதைப்பார்!

●

வயலின் வரப்புத் தகராறு. வக்கீலுடன் கோர்ட்டுக்குப்போனேன் "கோர்ட்" வயலுக்குப் போ என்றது. வந்து பார்த்தேன். வயலை மூன்றாவது எதிரி உழுது கொண்டிருந்தான்.

●

பணக்காரன் சொர்க்கத்தில் இடம்கேட்டான இடம் கிடைத்தது. எப்படி? அவனுக்கா வழி தெரியாது? கடவுளின் மனைவியைச் சரிக்கட்டி விட்டான்!

●

தன் புருஷனின் புகழைப் பாடுவதற்காகத் தான் பார்வதி — திருஞான சம்பந்தனுக்குலஞ்சமாகப் பாலூட்டினாள் என்று வைணவன் புகார் கொடுத்தான்

●

காலமும் உப்பும் ஒன்றே!

●

பிறந்த நேரம், நாள் குறித்து ஜோதிடனிடம் சென்று. இந்த சாதகனின்எதிர்காலம் எப்படியிருக்கும்? என்று கேட்டான் அவன். சரியாகக் கணித்துச் சொன்னார் — நிச்சயம் இந்த சாதகம் யோக சாதகம்: மந்திரியாவது உறுதி என்று.

—அதுசரி, நாய் எப்படி மந்திரியாகும்?

●

ஒற்றையடிப் பாதையா? மேடு பள்ளமுள்ளவழியா; வண்டிப் பாதையா? அகன்ற பளிங்குச் சாலையா?—அதைப்பற்றி பின்பு நினைத்துக்கொள்ளலாம்—முதலில் நீ எந்த இடத்திற்குப் போகிறாய்? என்பதைப் பற்றித் தீர்மானித்துக்கொண்டாயா?

—அ. அன்பநிதி

இந்திய அரசியலின் இரத்த நாளங்கள்!

நாணயமுள்ளவர்களின் கை விரல்களுக்குடையேயிருக்கும் எழுதுகோல், இந்திய தேசியக் காங்கிரசின் வரலாற்றை உன்னிப்பாக எழுதுமேயானால் அந்த வரலாற்றுச் சுவடியில் தந்தை பெரியாரின் தியாக வாழ்வு பொன் பூக்கும் பக்கங்களாகப்பதிவது உறுதி. ஈரோட்டில் வளமார்ந்தகுடும்பத்திலேபிறந்து, சுயசிந்தனையும் பட்டறிவும் சீரிய சமுதாய நோக்கும் விஞ்ஞான பூர்வமான செயலாக்கங்களும கொண்டு காங்கிரஸ இயக்கத்தின் நிர்மாண கர்த்தாக்களில் ஒருவராகி, ஈரோட்டு நகர் மன்றத்தலைவர் பொறுப்பிலேயிருந்து மாநில அளவில் நூற்றுக்கணக்கான பெரிய பதவிகளைத் தாங்கி — அவற்றை உதறித்தள்ளி பின்னர் காங்கிரசில் கண்கூடாகக் கண்டறிந்த பிற்போக்குத் தனங்களை எண்ணிப்பார்த்து, அதனின்று விலகிச் சுயமரியாதை இயக்கத்தைத்தொடங்கியவர் பெரியார். இந்திய அரசியலில் தென்னாட்டு மக்கள் பலவகைகளிலும் புறக்கணிக்கப்படுவதையும், மக்கள் சமூகம் சாதி, மத, ஆதிபத்திய, மூட நம்பிக்கைக் கொடுமைகளில் சிக்குண்டிருப்பதையும் கொதிப்புடன் எண்ணிப்பார்த்து, புதிய போர்க்கோலம் பூண்டு, தென்னிந்திய நல உரிமைச்சங்கம், நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கத்தையும் பின்னர் திராவிடர் கழகத்தையும் தோற்றுவித்து 94 வயது வரையும் வாழ்வைப் போராட்டக் களமாகவே ஆக்கிக்கொண்டு சமூக நீதிக்காகவும் சமதர்ம மலர்ச்சிக்காகவும் போரிட்டவர் பெரியார். பெரியாரின் நியாய உணர்வுகளும் போர் முறைகளும் யாருக்கும் தலை வணங்கியதில்லை அவரது போர் முறை முரட்டுத் தனமானது என்று விமர்சித்தவர்கள் அவரது மென்மையான இதயத்தைத் தொட்டுப்பார்க்க மறந்து விட்டார்கள். சமூகத்தின் இழிநிலை துடைக்கப்படுவதற்காகப் பரணிபாடி, எண்ணற்ற முறைகள் சிறைக்கூடங்களில் வாழ்ந்தவர் அவரது கூரிய நோக்கையும் நேரிய நெஞ்சத்தையும் அவரது கருத்து எதிரியாகக் கடைசி வரைக்கும் இருந்த இராசகோபாலாச்சாரியார் கூட நட்புப்பூண்டு வியந்துபாராட்டியே வந்துள்ளார்.

அறுபதாண்டுகளுக்கு முன்பே ருசியப் பொதுவுடைமை வளர்ச்சியைக் கண்டறிந்து வந்தும் இங்குள்ள சமூகத் தாழ்வினை எண்ணிப்பார்த்தும் புரட்சிப்பண்பு நடத்தியவர். பெரியாரின் அரசியல் வாழ்வு காங்கிரசில்தொடங்கி பின்னர் சமுதாயத்திற்கான பொதுப்பணி வாழ்வாகப் பரிணமங்கண்டு தனிப்பெரும் சரித்திரமாகிவிட்டது. வெள்ளையர் ஆதிக்கத்தை எதிர்த்து நின்ற இயக்கத்தின் தூணாக இருந்தவர் பெரியார் என்பது சரித்திரச் செய்தி காங்கிரஸ் பிற்போக்குத் தனத்தையும் சுகவாசிகள் அதில் அலங்கரித்ததையும் பிடிக்காமல் — பின்னாளில் பல இயக்கங்கள் உருவெடுத்தன. காங்கிரஸ் — அதிலிருந்து காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சி. பிரஜா சோசலிஸ்ட் கட்சி. கம்யூனிஸ்ட் கட்சி என இவ்வாறான பரிணமங்கள்: தந்தை பெரியார் திராவிடர் கழகம் கண்டார். அரசியலின் புனிதம் சமூக நீதியின் சிறப்பிலும் அறிவுள்ள மக்களின் உருவாக்கத்திலும்தான் இருக்க முடியும் என்ற முடிவில் சமூக இருளைப் போக்கிடும் பணியினை மேற்கொண்டார். இந்த வகையில் உலகிலேயே கடந்த பல நூற்றாண்டுகளிலிருந்து இன்றுவரை தனித்த ஒரு தலைவராகச் சரித்திரத்தில் நிற்பவர் பெரியார் அவர்களே ஆவார். அவர் ஒரு போராட்ட வாதி: பிற்போக்குத் தனங்களின் சமரசக் காற்றுக் கூட அவரைத் தீண்டியதில்லை அவரது வாழ்வே ஒரு புரட்சிக் காவியமாகும்.

பெரியார் அவர்களின் பார்வை சமூகப் படைப்பில் ஆழப் பதிந்து விட்ட நிலையில். அரசியல் அரங்கில், ஜனநாயக, சட்ட ரீதியான போர் முறைகளில் தென்னிந்திய மக்களின் உரிமைகள்

ச. அமுதன் பி.ஏ.

காக்கப்படவும் நலங்கள் பெறப்படவும் ஓர் அரசியல் இயக்கத்தைக் கண்டறிய வேண்டிய காலத்தின் கட்டாயம் உருவாகியது அந்தப் பரிணமத்தின் தோற்றமே அறிஞர் அண்ணா அவர்களின் அறிவும் ஆற்றலும் செறிந்த தலைமையின் கீழ் தொடங்கப்பெற்ற திராவிட முன்னேற்றக் கழகம். தென்னிந்திய மக்களின் உரிமை, தமிழர் சமுதாயத்தின் உயர்நிலை ஆகியவற்றை மேலோங்கச் செய்ப, சட்டமன்ற ஜனநாயக இயக்கமாகசமதர்ம கொள்கையுடன் உறுதி வாய்ந்த நிறுவன பலத்துடன். கட்டுக் கோப்புடன் மக்கள் மயமான செல்வாக்குடன் சட்டமன்ற. பாராளுமன்ற ஜனநாயகக் கட்சியாக தி. மு, கழகம் வலுப் பெற்று வளர்ந்து உறுதி பெற்றது. தமிழகத்தின் அபரிமிதமான ஆதரவுடன் ஆளுங்கட்சியாகவும் அமர்ந்தது. இந்த நிலை திராவிடர் கழகத்திலிருந்து தந்தை பெரியாரை மானசீக தளகர்த்தராகக் கொண்டு ஏற்பட்ட அரசியல் ரீதியான மலர்ச்சியாகும். அறிஞர் அண்ணா அவர்கள் தனது பின்னைய தலைமுறையாக கலைஞர், பேராசிரியர் மற்றும் முன்னணி செயல் வீரர்கள் கொண்ட கால கட்டத்தை உருவாக்கி விட்டுச் சென்றார்கள் தி. மு கழகம் தனித்தன்மையுடன் இந்தியாவின் ஒருமித்த அரசியலரங்கில் ஜனநாயகப் பாராளுமன்ற முறைகளின் பலகணியாக தமிழ்ச் சமுதாயத்தின் மேன்மைக்காக மாநிலங்களின் உரிமைகளைப் பாதுகாத்து, வலுவான இந்திய மைய அரசின் ஒற்றுமையினைப் பேணி, நடைபோடுகின்றது.

இதில் தி. மு. கழகத்திலிருந்து பிரிந்து சென்றோர் கண்ட இயக்கமும் பரிணமத்தின் முறையினதல்லவா என்று கேட்கலாம் அதனைக் கொள்கை வேறுபாட்டிலான பிரிவு என்று கூறமுடியாது. கட்சிக் கட்டுப்பாட்டை மீறி ஒரு சதித்திட்டத்தில் முளைத்த மாற்றம் எனபதே உண்மை, இயற்கையின் மூலக் கூறுகளாக விளங்கும் நடைமுறைக் கருத்து வேறுபாடுகளை. எந்த அரசியல் கட்சியும் சந்திக்கத் தவறுவதில்லை, சமூகத்தின் எண்ணங்களைச் சீர்தூக்கிப் பார்த்து அரசியல்தெளிவுள்ள தலைமையினை தி மு கழகம் பெற்றிருப்பதால், கழகம் அரசியல் பாசறையாகத் திகழ்கின்றது போராடும் உணர்வுள்ள, போராட்டங்களைச் சந்தித்த தலைமையை தி. மு கழகம் பெற்றிருக்கிறது.

விரிவான மனப்பாங்கில் — பல்வேறு போராட்டவாதிகளின். தலைவர்களின் எதிர் நீச்சல்களை இந்திய அரசியலில் கவனித்து வருகிறவர்கள் தி. மு. கழகம் எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிற கருத்துக்களை சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்தியாவைச் சுற்றிச் சுற்றிப் பிணைத்திருக்கிற வலைக் கம்பிகள், தளைகள் ஆகியவற்றை தி. மு. கழகத்தின் மைய முழக்கம் ஆழமாக அலசிப் பார்க்கிற போது ஒரு விரிந்த சிந்தனையில் ஒலியினை எழுப்புகிறது.

இந்திய விடுதலையின் வேள்வித் தீயில் சுடர்களெனப்பிரகாசித்த திலகர் நேதாஜி பாரதி, வ. உ. சி., கட்டபொம்மன், மருதுபாண்டியர்கள் இன்னோரன்ன தியாக சீலர்களின் வாழ்வோடு — தனிவாழ்வு என்ற ஒன்றைக் காணாத எண்ணிறந்த இளைஞர்களையும் எண்ணிப் பார்க்கிறோம். இந்திய விடுதலையில் இன்பக் கனவுகள் கண்டு, காதலிருவர் கருத்தநிறை, இரத்த மலர்களாக சிரித்திட்ட வீரர்கள் நெஞ்சுக்கு முன்னால் நிமிர்ந்து நிற்கின்றனர்

அரசியல் இயக்கங்களுக்கிடையே கொள்கை, நடைமுறை வேறுபாடுகள் இருக்கலாம். ஆயினும் வளரும் உலகின் சமுதாய அரசியல் நோக்கமும் கனவும் ‘சமதர்மமே! விடிைதோறும் வியப்பினையும் விந்தைகளையும் கண்டு. விஞ்ஞானப் போர்ப் பாட்டையினை அமைத்துக் கொண்டிருக்கும் உலகம். அரசியல் களத்தில் பல வீரர்களைச் சந்திக்கிறது. அவர்களின்பால் நமக்குத் தெரிகிற நடைமுறைக் கொள்கை வேறுபாடுகளைக்கூட மறந்து விட்டு அவர்களின் சமூக வாழ்வை உற்றுப் பார்க்கிற போது உருவாகின்ற அரசியல் வாதிகளுக்கும் இளந் தலைமுறையினருக்கும் பல பாடங்களும் பாதைத் தெளிவுகளும் கிடைக்கின்றன.

இந்திய அரசியலில் கம்யூனிச இயக்கம் கண்ட பல்வேறு மாற்றங்களும் சந்தித்த நடைமுறைத் தவறுகளும் கொள்கை வழிப்பயணத்தின் முரண்பாடுகளும் அநேகம் பொதுவுடைமைத்தத்துவம் தேர்தல்காலப் போக்குகளில் திசை மாறி மாறி நின்ற பல கோலங்களை இந்திய அரசியல் சந்தித்திருக்கிறது

பெரியாரின் நினைவுகளை, அண்ணாவின் கனவுகளை இதயத்தில் படரவிட்டுக்கொண்டு இந்திய அரசியலின், திர்மானிக்கும் சக்தியாக விளங்கும் கலைஞரின் தலைமையில் நடைபோட்டுக்கொண்டிருக்கிற நாம் இதனை விரிவாக எண்ணிப் பார்த்துக் கொண்டிருக்கிற வேளையில் ஓர் அரிய நூல் நமது பார்வையில் படுகிறது. கேரள மண்ணிலும் இந்திய அரங்கிலும் உழைப்பால் உயரிய இடத்தைப் பெற்றிருக்கும் திரு ஏ. கே. கோபாலன் என்ற ஓர் உயரிய மனிதரின் விவேக வரலாறே அந்நூல். நூலின் கருத்துக்களோடு மனப் பரிமாற்றம் செய்து கொள்வது ஒரு நிறைவைத் தருகிறது. திரு ஏ. கே ஜி. அவர்கள் அனுபவ ரீதியாகச் சிந்தித்தவையில் முகிழ்த்த பல கருத்துக்கள் அரசியல் இயக்கங்களுக்கும் வளரும் சமூகப் பணியாளர்களுக்கும் பெரிதும் பயன்படுபவனமாகும்.

ஏ. கே. ஜியின் நிகழ்ந்த கால நினைவுகள் தமிழில் நான் என்றும் மக்கள் ஊழியனே ஏ. கே. ஜி. சொல்கிறார் என்ற தலைப்பில் தூக்குமர நிழலைத் தரிசித்து பதினாறு ஆண்டுக் காலம் சிறையில் வாழ்வைக் கழித்தவரும் சமதர்மக்கொள்கையுடைய சிறந்த இலக்கிய கர்த்தாவுமான தோழர் சி ஏ. பாலன் மொழிபெயர்த்துத் தந்துள்ளார்

ஏ. கே ஜி. யின் வாழ்வு அரசியல் போராட்டங்கள் சிறைக்கூடங்கள் ஆகியவற்றையே உள்ளடக்கியது. இதனைப் படித்தபோது இருந்த மகிழ்ச்சியும் சிந்தனையும் நிரந்தரமாக நீடிக்கின்றன இந்

[தொடர்ச்சி 8-ம் பக்கம்]

நாடாளு மன்றத்தில் முரசொலி மாறன் தீர்மானம்!

கழக உறுப்பினர் முரசொலி மாறன் கீழ்க்கண்ட தீர்மானத்தை மாநிலங்களவையில் முன்மொழிந்து பேசினார்.

“மத்திய அரசு அலுவலகங்களிலும், அரசு உடைமையாக்கப்பட்ட வங்கிகளிலும், அரசு உடைமையாக்கப்பட்ட நிறுவனங்களிலும் நேரடியாகவும், மறைமுகமாகவும் இந்தி திணிக்கப்படும் வகையிலும், இந்தி ஆதிக்கம் வலுப்படும் வகையிலும் வேண்டுமென்றே முயற்சிகள் செய்யப்படுவதைக் கண்டு இந்த அவை கவலை கொள்கிறது. இப்போது உள்ளதுபோல் பிரிவுபடுத்தும் சக்தியாகவும், வேறுபடுத்தும் சக்தியாகவும் இல்லாமல் இந்த நாட்டின் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் காப்பாற்றுவதையும் வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு; எல்லா தேசீய மொழிகளுக்கும் சமத்துவம் அளிக்கும் வகையில் இந்த அரசு தனது ஆட்சி மொழிக் கொள்கையை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று இந்த அவை கருதுகிறது. இந்த நோககத்தை அடிப்படையாகக் கொண்டு அனைத்து மாநிலங்களின் ஆட்சி மொழிகளும் மத்திய அரசின் ஆட்சிமொழிகளாக ஆக்கப்பட வேண்டும் என்று இந்த அவை பரிந்துரைக்கிறது. இதற்கு முதற்படியாகத் தமிழ் எழுத்துக்களோடு கூடிய தமிழ் மொழியை மத்திய அரசின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக உடனடியாக அறிவிக்க வேணடும் என்று இந்த அவை கேட்டுக் கொள்கிறது,”

சித்தார்த்தன் சிலை

கருணாநிதி

கெண்டை விழி கருவண்டு நிகர் கூந்தல். குங்கும வண்ணத்தின் குறுநகையைச் சிந்துகின்ற அந்திவானத்துச் சிவப்பெல்லாம் அவள் இதழில்... கன்னத்தில்! தாங்குமோ அன்றித் தளர்ந்து வளையுமோ என்றெண்ணத் தோன்றும் வகையினிலே இடையழகும் இளமைப் பேரழகும் போட்டியிடும் பொற்பாவை.

அலைதோறும் அலைதோறும் வருகின்ற நுரைபோல அவள் உதிர்க்கின்ற சொல் எல்லாம் சுவை மணக்கும் தேன்துளிகள். நிலம் நோகும் என அஞ்சும் அவள் நெஞ்சம் நடையழகில் தெளிவாகும் சிப்பியிலே முத்து விளைகின்ற உண்மையினைப் பொய்யாக்கும் அவள் சிரிக்கின்றபோது தெறிக்கின்ற நிலவின் ஒளி! யாழினிலே குழலினிலே இனிய இசைதான் எழும் என்போர் மறைந்திருந்து அவள் பாட்டைக்கேட்டு "யார் சொன்னார்; யாழ் குழலில் பாட்டும் உண்டு" எனக் கருத்தை மாற்றிக் கொள்வர்.

அவன் பெற்ற பேறே அரும்பேறு என வாழ்த்தியது அவளைப் பெற்றவனை — உலகம்! "உனைப் பெற்றவரை வணங்குகிறேன். தமிழே! உயிரே! ஓவியமே! உனைப் பிரிந்து ஒருக்கணமும் நில்லாது என்றன் கூடு" என உறுதிஎடுத்துக்கொண்டு அருகிருந்தான். இலக்கியத்து எழிலெல்லாம் காவியத்துச் சுவையெல்லாம் அவளோடு வாழ்வதிலே காண்கின்றேன் எனப் பெருமை கொண்டிருந்தான்.

அத்தகையோன் எப்படித்தான் அவளைப் பிரிந்தான் என்று ஊரெல்லாம் வியப்பினிலே மூழ்கிவிட — அவள் விழிகள் நீரூற்றாய் மாறிவிட - நிலைமையொன்று உருவாகித் தனியானாள்.

தேனமுதம் தெவிட்டியதோ? வானுறைந்த வதனத்தை மறந்தானோ? ஏன் கிளியே உனக்கிந்த இன்னலென்று ஊர்ப்பெண்கள் கேள்வி போட்டார்.

"உள்ளத்தை ஒப்படைத்தேன். உயிர் மூச்சு அவரென்று எண்ணிக்கிடந்தேன். பனித்துளியால் சுகம் பெற்ற மலர் மீது பாலைவனக் கடுங்காற்று வீசுமென்று நினைக்கவில்லை. இரு கிழமை அவர் உள்ளம் நிலையாக இருக்கவில்லை. அதனை அவர் பேச்சாலே உணர்ந்து கொண்டேன். இப்படியாகுமென்று அப்போது தெரியாது தோழி;" என அழுதாள் தமிழ்ப்பாவை.

"கலங்காதே! கண்ணீர் சிந்தாதே! வழியொன்று சொல்கின்றேன் கேள்! ஆற்றுக்குத் தென்புறத்தில் அழகான சோலையிடையிருக்கின்ற புத்தரது கோவிலுக்குச் சென்று குறை சொல்லி முறையிட்டால் கொழுநன் திரும்பிடுவான். நிற்காதே போ." என்றாள் உயிர்த்தோழி.

அங்கனமே அவள் சென்றாள் 'அருள் வடிவே! அன்பின் பிழம்பே! செயற்கரிய செய்திட்ட சித்தார்த்தப் பெருமானே! போதி நிழலிலே உலகுக்குக் குளிர் தந்தாய்! இன்று உன் நிழலால் என் துயரம் போக்கிடுவாய். அழகரசன் என் ஆளன், உயிர்த்துணைவன். பிரிவு எனும் வேதனையைத் தரமாட்டேன் எனச் சொன்ன என் அத்தான் — அவரில்லை என்னிடத்தில் இப்போது! எங்குற்றார்? ஏன் சென்றார்? என்ற சேதி தெரியாது இவ்வேழைக்கு! தூயவனே: என் துன்பம் துடைத்திடுவாய்! காசினியோர் வாழ்வதற்கு வழி சொன்ன பெரியவனே! கருணைக்கடலே! அலைக்கரத்தால இவ்வறண்ட கரையை நனைத்துவிடு. என் மனத்தை மகிழவைப்பாய்'!

— என அழுதாள். தொழுதாள். விளக்கேற்றி வைத்து விழிநீரைச் சிலைமுன் சிந்தி நின்றாள். சிலை பேசிற்று. கண்மூடிக்கொண்டு அதைக் கேட்டாள்:

"பெண்பாவாய்! கணவன் பிரிந்துவிட்ட கவலைதனை என்னிடத்தில் உரைக்கவந்தாய். என்ன மதி உன்றனுக்கு? அழகு மனையாட்டி — அவளருகே உறங்குகின்ற அருமைச் செல்வன் — இருவரையும் ஏங்கவிட்டு "அன்பு" போதிக்கத் துறவுபூண்டவன் நான். அவனிக்கு நான் தந்த படிப்பு...அன்பு!... அன்பு!... அன்பு!... ஆனாலும் அந்த அன்புதனை எனை நம்பி வாழ்ந்திட்ட துணைவியிடம் அவள் பெற்ற பிள்ளையிடம் காட்டாமல் வெளிவந்தவன் நான். கணவனைப் பிரிந்த உன் கவலையைப் புரிந்துகொள்ளும்சக்தி எனக்கில்லை போ — போ!"

குரல்கேட்டாள், 'அய்யோ பகவானே!'' என அழுதாள். சிரிப்பொலி கேட்டது. விழி திறந்தாள். சிலைக்குப் பின்னிருந்து அவள் கணவன் வந்திட்டான்

'அத்தான்' எனப்பாய்ந்தாள்

அணைத்தபடி "ஆருயிரே! விளையாடிப்பார்த்தேன் உன்னோடு அதற்குள் நீ வேதனை உருவாகிவிட்டாயே! வா வா போவோம்'' என்றான்.

'சித்தார்த்தன் அருள்!'' என்றாள்

"அவர் அருளியது உலகை வாழ்விக்கும் உயர் கொள்கை. உன்னையும் என்னையும் சேர்த்து வைக்க உலகோரின் பிரார்த்தனைகளை நிறைவேற்றிக் காணிக்கைக் கூலி பெற — அவரில்லை. அந்தோ! அவரைக் கடவுளாக ஆக்கிவிட்டார் — தீமை தீமை!!" என்றான். "பின்னர் பேசியது யார்?'' என்றாள்

"சிலையல்ல; நானே!'' என்றான். தழுவிக் கொண்டான்.



தி. மு. கழகம் உங்கள் வீட்டுப் பிள்ளை போல..!

திராவிட முன்னேற்றக் கழகம் என்பது பதவியில் அமர்வதற்காக மாத்திரம் என்று தப்பு செய்து கருதாதீர்கள்

நம்முடைய அண்ணன், நம்மை வளர்த்த அண்ணன், நமக்குப் பயிற்றுவித்த அண்ணன் பாசமிக்க அண்ணன் தமிழர்களின் வழிகாட்டி, தமிழர்களின் தலைவன். உலகத்திலே பரவிக் கிடக்கின்ற ஏழுகோடி தமிழர்களின் இதய நாதமாக இருக்கிற தலைவன், பேரறிஞர் அண்ணா 1967—ல் விருகம்பாக்கம் மாநாட்டில் எடுத்துச் சொன்னாரே அந்தக் கருத்துத்தான் என்னுடைய உள்ளத்திலே ஆழப் பதிந்து கிடக்கிறது.

என்ன சொன்னார்? திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிற்கு சென்றாலும் செல்லாவிட்டாலும் தமிழர்களுடைய மரபு, மானம், வரலாறு, இலக்கியம் இவைகளைக் காப்பாற்ற, தமிழ் மொழியைப் பாதுகாக்க திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பணி அது ஆட்சியிலே இருந்தாலும் இல்லாவிட்டாலும் இன்னும் ஐம்பது ஆண்டுக் காலத்திற்குத் தேவைப்படுகிறது என்று சொன்னார். அந்த ஐம்பது ஆண்டுக் காலம் வரையில் நான் இருப்பேனோ? இல்லையோ?

நான் மாத்திரம் அல்ல! திராவிட முன்னேற்றக் கழகம் அறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட தம்பிமார்கள் செயல் வீரர்கள் எல்லாம் சேர்ந்த பாசறைதான் திராவிட முன்னேற்றக் கழகம்.

அவர்களுடைய மறைவிற்குப் பிறகும்கூட பிள்ளைகள் பேரன்மார்கள் கட்டிக்காப்பாற்ற வேண்டிய அறிவுரை பேரறிஞர் அண்ணா விருகம்பாக்கம் மாநாட்டிலே நமக்குத் தந்த உரையாகும்.

எனவேதான் ஆட்சிப் பொறுப்பல்ல முக்கியம், முதலமைச்சராகிவிடவேண்டும் எப்படியாவது என்று முண்டியடித்துக்கொண்டு நாங்கள் யாரும் இன்றைக்குப் போரிட்டுக் கொண்டு இருக்கவில்லை.

ஆட்சி வரும், போகும். ஆனால் இலட்சியங்கள் என்றென்றைக்கும் இருக்கக் கூடியவை நீங்கள் ஏன் எங்களை மாற்றினீர்கள்? இரண்டு இடங்களைச் சேலத்தில் திராவிட முன்னேற்ற கழகத்திற்குத் தந்த தாய்மார்களே! பெரியோர்களே! வாக்காளப் பெருமக்களே. அந்த இரண்டு இடங்களையும் எங்களிடம் இருந்து பறித்து இன்றைக்கு ஆளும் கட்சியாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை ஏன் ஆக்கினீர்கள்?

நாங்கள் செய்த சாதனைகளிலே குறை கண்டா?

நாங்கள் சாலைகள் போடவில்லை என்றா? நாங்கள் கிராமங்களை இணைக்கிற சாலைகள் போட பலகோடி ரூபாய்கள் திட்டம் தீட்டவில்லை என்றா? ஏழை எளியவர்கள் கண்ணொளி மங்கிக் கிடக்கிறார்களே அவர்களுக்கு எல்லாம் ஒளிவழங்க ஒப்பற்ற திட்டத்தை நிறைவேற்றினோமே! இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத திட்டத்தை நிறைவேற்றி கண்ணொளி வழங்க இலவச அறுவை சிகிச்சை, செய்து இலவச மூக்குக் கண்ணாடி வழங்கினோமே; அது தவறு என்றா? குடிசை வாழ்மக்களுக்கு கோபுரங்கள் போல் வீடுகளைக் கட்டித் தந்தோமே அதிலே குறை கண்டா? தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சேரிப்புறங்களிலே வாழுகிற மக்களுக்கு பொழுது தோறும் பாம்போடும் பூரானோடும் தேளோடும் கொட்டுகின்ற மழையோடும். கொளுத்துகின்ற வெயிலோடும் போராடிக் கொண்டு இருக்கிற தாழ்த்தப்பட்ட பெருமகனுக்கு நாலாயிரத்து ஐநூறு ரூபாய் செலவில் நாற்பதாயிரம் வீடுகளை முதல் கட்டமாக 13 கோடி ரூபாய் செலவில் கட்டித் தந்தோமே அது தவறு என்றா?

அரசாங்க ஊழியர் பணிபுரிகிற காலத்தில் செத்து விட்டால் மறுநாளே அந்தக் குடும்பத்திற்கு பாதுகாப்பு நிதி பத்தாயிரம் ரூபாய் பாய்ந்து செல்லும் என்று அறிவித்தோமே அது தவறு என்றா? கைத்தறி நெசவாளர்கள். கஷ்டப்பட்ட நேரத்தில், இன்றைக்கு ஏதோ சென்னையிலே கொடுப்பதாகச் சொல்கிறார்களே மாநகராட்சித் தேர்தலையொட்டி அப்படி அல்ல எதையும் எதிர்பார்க்காமல் வறுமையில் வாடுகிற நெசவாளர்களுக்காக தேங்கிக் கிடக்கிற துணிகள் விற்பனையாகாத காரணத்தால் வாடிய நெசவாளர்களுக்கு ஏறத்தாழ ஒரு இலட்சம் பேருக்கு நூறு ரூபாய் கடன் அளித்தது ஒரு கோடி ரூபாய். அப்படி வழங்கப்பட்ட கடனை மானியமாகவே வைத்துக் கொள்ளுங்கள் என்றுகடனை ரத்து செய்தோமே அது தவறு என்றா? வேறு என்ன காரணத்திற்காக?

தாய்மார்களுக்குத் தெரியும்! ஏன் ஆட்சியை மாற்றினீர்கள்? ஏன் கழக ஆட்சி வேண்டாம் எம். ஜி. ஆர் ஆட்சி வேண்டும் என்று விரும்பினீர்கள்?

நான் தாய்மார்களுக்குத் தெரிந்த உதாரணத்தையே சொல்லுகிறேன் நேற்றைக்கு வைத்த குழம்பு முருங்கைக்காய் குழம்பு. இன்றைக்கும் முருங்கைக்காய் குழம்பு வைப்பானேன். கத்தரிக்காய் குழம்பு வைத்துப் பார்ப்போம் என்று கத்தரிக்காய் குழம்பு வைப்பதைப்போல் நீங்கள்வைத்தீர்களே அல்லாமல் முருங்கைக்காய்க் குழம்பு நன்றாக இல்லை. அதனால் கத்தரிக்காய் குழம்பு வைத்தோம் என்று நீங்கள் சொல்லமாட்டீர்கள். முருங்கைக்காய் குழம்பு நன்றாகத்தான் இருந்தது. ஆனாலும் தினம் அதே குழம்பு வேண்டாம் இன்றைக்குகத்தரிக்காய் குழம்பு வைப்போம் என்று வைத்தீர்கள். குழம்பு வைத்து இலையிலே ஊற்றிய நேரத்திலேதான் கத்தரிக்காய்க்குள்ளே இருந்த புழுக்கள் செத்துப்போய் சோற்றிலே மிதக்கின்ற காட்சியைக் காண்கிறீர்கள் அதுதான் இன்றைய நிலைமை

நம் வீட்டுப்பிள்ளை கொஞ்ச காலம் பிரிந்திருந்து விட்டு வந்தால் அவனைப் பார்த்ததும் பிள்ளையை ஆசையோடு அரவணைத்து 'வாடா கண்ணே' என்று அழைப்பதைப்போல் நீங்கள் இந்த மைதானத்தில் இலட்சோப லட்சமெனத் திரண்டு வந்து உங்கள் வீட்டுப்பிள்ளை என்ற பாசத்தோடு என்னை வரவேற்கிறீர்கள் என்ற உணர்ச்சியைத்தான் நான் பெறுகின்றேன்.

கலைஞர்

(சேலம் பொதுக்கூட்டப் பேச்சு)

இரத்தத்தின் இரத்தங்களுக்கே வெளிச்சம்!

தமிழகச் சட்டப் பேரவையில் நம்பிக்கை யில்லாத் தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்துக்குப் பதிலளித்து முதல்வர் எம்.ஜி. இராமச் சந்திரன் ஐந்தரை மணி நேரம் [330 நிமிடங்கள்) பேசினாராம்.

எதிர்க்கட்சியினர் கூறிய குற்றச் சாட்டு களின் முதுகெலும்பை முறிக்கிற வகையில் முதல்வரின் பதிலுரை அமைந்து இருந்ததாம்.

எம். ஜி. ஆரை நிறுவனராகக்கொண்ட ஆளுங்கட்சி நாளிதழ்தான் முதல் பக்கத்தில் இப்படியொரு பெட்டிச் செய்தியை வெளியிட்டுப் பெருமையடித்துக்கொண்டிருக்கிறது!

நல்லவேளை! 330 நிமிடங்களை 60 ஆல் பெருக்கி 19 800 வினாடிகள் பேசி சட்டமன்ற வரலாற்றிலேயே புதுமைப் புரட்சியை உருவாக்கியவர் எங்கள் புரட்சித் தலைவர் என்று போடாமல் போனார்களே!

உள்ளபடியே இது ஒரு பெரிய புரட்சி தான்! சினிமா செட்டிலே ஒரு ஷாட் எடுப்பதற்குள் வேர்த்து விறுவிறுத்து, பக்கத்திலே 'ஸ்பெஷலாகக்' கொண்டு வந்து போடப்படும் நாற்காலியில் அமர உடனே ஒருவர் ஓடோடி வந்து மின் விசிறியை இவர் பக்கம் திருப்ப, மற்றொருவர் முகத்தில் உள்ள வியர்வைத் துளிகளைத் துடைக்க ஒருவர், ஹார்லிக்ஸ் கொண்டுவந்து நீட்ட இப்படியாக சக நடிகையும் துணை நடிகைகளும் வந்து சூழ்ந்து நிற்க, இப்படிப்பட்ட சுகபோக சாம்ராஜ்யம் நடத்தியே பழக்கப்பட்டுவிட்ட ஒரு ஹீரோ நடிகர் சட்டமன்றத்தில் நின்று கொண்டு ஐந்துமணி நேரம் மூச்சுவிடாமல் பேசுவது என்றால், சாமான்ய காரியமா?

எதிர்க் கட்சித் தலைவர் கலைஞர் கூட ஒன்றே முக்கால் மணி நேரம்தான் பேசினார். இதற்கு முன் முதல்வர்களாக இருந்த பேரறிஞர் அண்ணாவோ. கலைஞரோ கூட இத்தனை நிமிட நேரம் பதிலளித்ததாக நினைவில்லை,

அண்ணாவே செய்யாத, கலைஞரே செய்யாத புரட்சியையல்லவா இந்தப் 'புரட்சியார்' செய்திருக்கிறார்!

அண்ணாவோ. கலைஞரோ இப்படி மணிக் கணக்கில் பேசியிருந்தால்கூட அதில் ஒன்றும் ஆச்சர்யமில்லை: அவர்களெல்லாம் அரசியல் வாதிகள் - பேசிப் பேசி எழுதி எழுதி வளர்ந்தவர்கள், ஆனால் புரட்சிநடிகரும் அப்படியா?

இது பெரிய சாதனைதான். தமிழகச் சட்ட மன்ற வரலாற்றில் புரிந்துள்ள இந்தச் சாதனையைப் பாராட்டுவதற்கென்றே ரசிக சிகாமணிகள் ஒரு விழா எடுக்கலாம். அந்த விழாவிலே, மதுரைவீரன் சினிமா பார்த்து விட்டு மந்திரி ஆன பொன்னையனை பாராட்டுரை வழங்கச் சொல்லலாம்: புரட்சித் தலைவரிடம் 'மண்டு' என்ற செல்லப் பெயர் பெற்றுள்ள மந்திரி இராகவானந்தத்தின் சிலம்ப விளையாட்டு நிகழ்ச்சிக்கும் ஏற்பாடு செய்யலாம்'

சேனு

எழுபத்திரண்டு மணி நேரம் இடைவிடாமல் சைக்கிள் விடும் நிகழ்ச்சி. நாற்பத்தெட்டு மணி நேரம் தொடர்ந்து நடந்து செல்லும் நிகழ்ச்சி, ஒரே நேரத்தில் நூறு இட்டிலி உண்ணும் நிகழ்ச்சி; இருநூறு வாழைப் பழத்தை விழுங்கும் நிகழ்ச்சி என்றெல்லாம் நாட்டிலே நடக்கின்றன அல்லவா? அந்தப் பட்டியலில் முதல்வர் இராமச்சந்திரனின் 330 நிமிட நேரப் பேச்சையும் சேர்த்துக் கொள்ளலாம்.

அந்தக் காலத்தில் தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா போன்ற திராவிட இயக்கத் தலைவர்களெல்லாம் கூட மூன்று மணி நேரத்துக்கு மேல் பொதுக் கூட்டத்திலோ மாநாட்டிலோ பேசியது கிடையாது. அவர்களையெல்லாம் மிஞ்சும் வகையில் ஐந்தரை மணி நேரம்—330 நிமிட நேரம், அதுவும் சட்ட மன்றத்தில் நின்று பேசுவது என்றால் சாமான்ய காரியமா?

நாட்டுப்புறங்களிலே நாடகம் தெருக் கூத்து விடிய விடிய நடைபெறும். அரிச்சந்திர நாடகத்தை ஐந்து நாட்கள் நடத்துவார்கள். அதிலே மயான காண்டம்தான் 'க்ளைமாக்ஸ்' காட்சி; அதில் சந்திரமதியின் 'புலம்பல்' மட்டும் இரவு 10 மணிக்கு ஆரம்பித்தால் விடிந்து 6 மணி வரை நீடிக்கும்! நாடக முடிவில் சந்திரமதி வேடதாரிக்கு மாலை மரியாதைகள் பணம் பரிசுகளெல்லாம் உண்டு!

அந்த சந்திரமதியின் புலம்பலுக்கும் இந்த இராமச்சந்திரனின் உளறலுக்கும் என்ன வித்தியாசம் என்று புரியாமல் நாமும் புலம்ப வேண்டியிருக்கிறது!

ஆனால் ஆளுங்கட்சி ஏடு கூறுகிறது: எதிர்க் கட்சியினர் கூறிய குற்றச்சாட்டுக்களின் முதுகெலும்பை முறித்துவிட்டவராம் முதல்வர்!

முதல்வர் எப்போதும் முதுகுப்புறம்நின்று தான் எதிரியைத் தாக்கிப் பழக்கப்பட்டவரே தவிர நேருக்கு நேராக நின்று எதிரியைத் தாக்குப்பிடித்தவரல்லர். வாய்வீரம் பேசி விட்டுக் கடைசியில் தாம் தப்பினால் போதுமென்று புறமுதுகிட்டு ஓடிப் பழக்கப்பட்டவரே தவிர: இறுதிவரை ஒரே நிலையில் நின்று எதிரியை வீழ்த்தியதாக அவர் வரலாற்றில் நிகழ்ச்சி இல்லை!

அவர் எந்தக் குற்றச்சாட்டின் முதுகெலும்பை முறியடித்தார் என்று அந்த ஏடு சுட்டிக்காட்டியிருக்குமானால் நாமும் 'சபாஷ்' போட்டுப் பாராட்டலாம்!

எதிர்க்கட்சித் தலைவர் கலைஞரோ ஏனைய எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களோ எடுத்துரைத்த குற்றச்சாட்டுக்கள் அப்படியேதான் இருக்கின்றன! ஐந்தரை மணிநேரப் பேச்சில் எத்தனை எலும்புகளை முறித்தார் என்பதை அருகிலிருந்து எண்ணிக்கொண்டிருந்த அந்த ஏட்டின் நிருபர் பட்டியல் போட்டுக் கொடுக்கத் தவறியது ஏனோ தெரியவில்லை!

முதல்வரின் எலும்பு முறிப்பு'த் திருப்பணி அவாது 'இரத்தத்தின் இரத்த'ங்களுக்கே வெளிச்சம்!

★

★★★★★★★★★★★★

உறுதிக்கு!
உழைப்பிற் நம்!!

எங்கள் பிரதிநிதிகள்:

கே. எம். ஜி. மாதவன்

சென்னை-4

பி நெடுஞ்செழியன்

பி. ஏ.

பாண்டிச்சேரி.

— விசுவாசம்

★★★★★★★★★★★★

இந்திய அரசியலில்...

(5 ம் பக்கத் தொடர்ச்சி)

நூலின் கருத்துக்களை பார்வையிட்டுச் செல்லும்போது — தன்னையே விமர்சிக்கத் தயங்காத. தனது நடைமுறைகளையே விமர்சிக்கத் தயங்காத தனது கட்சி வாழ்வையே விமர்சிக்கத் தயங்காத ஓர் உயரிய போராட்ட வீரரையே சந்திக்கிறோம்.

நூலின் சில துளிகளைப் பார்க்கலாம், காங்கிரஸ்இயக்கத்தில் விடுதலை உணர்வேந்தி போரிடும் வீரராகவும் பின்னர் காங்கிரஸ் சோசலிசக்கட்சியின் முன்னணியாளராகவும் பின்னர் கம்யூனிஸ்ட் கட்சியின் நிர்மாணகர்த்தர்களில் ஒருவராகவும் அங்கம் வகித்து சிறை தலைமறைவு ஆகியவற்றில் பெரும்பகுதி கழித்த ஏ. கே. ஜி, அவர்கள் இந்திய இரத்த நாளங்களில் ஒருவர்.

"இந்தியாவில் நிலவிவரும் பல்வேறுபட்ட பண்பாடுகளை கணக்கிலெடுக்காமல், அந்தப் பல்வேறு பண்பாடுகளின் ஒற்றுமையைப் பற்றிச் சிந்தனைச் செய்வது மதியீனமாகும். அந்தப் பல்வேறு பண்பாடுகளை ஏற்றுக்கொள்வதுமூலம்தான் இந்திய நாட்டின் ஒற்றுமையை உறுதிப்படுத்தமுடியும். அரசினர் இந்த உண்மையை எவ்வளவு விரைவில் ஏற்றுக்கொள்கின்றனரோ அவ்வளவு ரைவில் இந்தியாவின் ஒற்றுமையை அவர்களால் உறுதிபடுத்த முடியும்''

—ஏ. கே. கோபாலனின் இந்தச் சொற்களில் தி. மு. சழகத்தின் மூலமந்திரம் தெரிகிறது. டில்லியில் இருந்து கொண்டு ஆள்வோர் தென்னாட்டு மக்களின் உணர்வுகளைப் புறக்கணிப்பதை வேதனையுடன் எண்ணிப் பார்க்கிறோம்; ஒற்றுமைக்கு அவர்களே உலைவைப்பதையும் கொதிப்புடன் காண்கிறோ ;

தென்னாட்டு மனிதர்களில் தலைவர்களில் நிமிர்ந்த வீரராகத் தென்படும் ஏ. கே. கோபாலன் நூலில் இந்திய அரசியலில் தெளிக்கப்பட வேண்டிய மாமருந்து இருப்பதால் அந்த மருந்து எடுத்துத் தெரிவிக்கப்பட்டது.

தெற்கே வீசிடும் காற்றினை வடக்கே உள்ளவர்கள். அதிலும் பாராளுமன்றத்தில் அமர்ந்திருப்பவர்கள் சாதாரணமாகக் கருதிவிடக்கூடாது என்பதன் அபாய அறிவிப்பாக சில கருத்துக்கள் ஏ. கே. ஜியிடம் உறுதியாகக் கண்டோம்.

பெரியாரின் பூமியில் தெற்கில் இருந்து பிறந்திடும் தென்றலில் புயலும் அடங்கியிருக்கிறது என்ற உண்மையை டில்லி நாற்காலிகள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஏ. கே ஜியின் நூலை எடுத்துக் காட்டியதன் காரணம் அறிஞர் அண்ணா அவர்கள் பண்டித நேரு பிரதமராக இருக்கும்போது அவருக்கு முன்னாலேயே மாநிலங்களவையில் நான் தென்னக மக்களுடைய உணர்வுகளின் பிரதிநிதியாக இங்குபேசுகிறேன், எனக் கூறியதும் தலைவர் கலைஞர் அவர்கள் இந்தத் துணைக்கண்டத்தில் மாநிலங்கள் உரிமைகள் பெற்றும் பல்வேறுகலாச் சாரத்திற்குச் சொந்தமானவர்கள் தங்களின் மொழி, இனப்பாதுகாப்பிற்கு வழி செய்தும் இந்திய ஒற்றுமை நிலவிட மத்திய அரசு ஆவன செய்யவேண்டும் என முழங்குவதும் —

தெற்கே விளைந்த விளையும் அரசியல் —போராடும்தலைமைகள் இந்த துணைக் கண்டத்தின் இரத்த நாளங்கள் என்பதை அரசியல்வாதிகள் உணர வேண்டும். நம்மோடு ஏ கே. ஜியும் இணைக்கோட்டில் நிற்கிறார்'

தொலைபேசிஎண் கடை: 33213 இல்லம் 31922

காம்நாடுவோர்தவறாமல் நாடுவது

தமிழக எண்ணெய்ப் பலகாரம்

தயாரிப்பு-விற்பனை நிலையம்

92. திருப்பரங்குன்றம் சாலை மதுரை 11

தனிச்சிறப்பு: சிலேபி, தெக்கத்திமிட்டாய், அதிரசம், இனிப்புசேவு, பக்கவடா, மிக்சர், முறுக்கு, கடலை நவதானியம் மற்றும் இனிப்புகாரவகைகள்

உரிமையாளர்
பே. தேவசகாயம்

கிளைகள்: 261. மேலமாசி வீதி, 70. சுவாமி சன்னதி
12. அழகர்கோவில் சாலை, 72.C, பெரியார் சாலை, மதுரை.

பெரிய இடம் சின்ன புத்தி..

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வர் நாற்காலி. ஆனால் அதில் உட்கார்ந்திருப்பவருக்குபெரிய புத்தி வேண்டும் — பெருந்தன்மை வேண்டும். பதவியைக் காட்டி நாற்காலியின் அதிகாரத்தைக் காட்டி சட்டத்தைக் கோடிட்டுக் காட்டி எத்தனை நாட்கள் ஓட்டிட முடியும்? மக்கள் நலன் காக்கப்பட வேண்டாமா? மக்களுக்குச் சராசரி பாதுகாப்பு கிடைத்திடவேண்டாமா? தொழில் அமைதி இல்லை. தொழிலாளர்க்குப் பாதுகாப்பு இல்லை தொழிலாளிக்கும் முதலாளிக்கும் சமூக உறவில்லை. சமூகஉறவை பேணிக் காத்திட அரசு முனையவில்லை.

தொழிலாளர்களுக்காக வாதாட வேண்டிய அரசு முதலாளிக்கு வக்கீலாக மாறுகிறது. துடித்துஎழுகிற தொழிலாளி நசுக்கப்படுகிறான்; அவன் சார்ந்திருக்கிறதொழிற் சங்கங்கள் மூடப்படுகிறது. காவல்துறையினரை ஆட்சியாளரின் உணர்வுக்கு தக்கார் போல் பயன்படுத்தப் படுகிறது.

உண்ணாவிரதம் ஊர்வலம் கோரிக்கை வேண்டுகோள் வேலைநிறுத்தம் அத்தனையும் அலட்சியப்படுத்தப் படுகிறது.

கொலைகள் குற்றங்கள் மலிகின்றன. பாதிக்கப்படுகிற மக்கள் இது என்ன காட்டு தர்பார்! ஆட்சியா இது என்கிறார்கள். பல்வேறு வழிகளில் பழிவாங்கப்படுகிற தொழிலாளர்களை காணும் போது தொழிற்சங்கத் தலைவர்கள் குமுறுகிறார்கள். கொந்தளிக்கிறார்கள். அன்றாடத் தேவைகளைக்கூட நிறைவு செய்ய முடியாத இந்த அரசு மக்கள் அரசா? என்று அரசியல் கட்சிகள் அத்தனையும் கண்டனக் குரல் எழுப்புகின்றன

கலைஞர் தலைமையிலான கழகம் தேர்தல் களத்தில் குதித்த நேரத்தில் கழகத்துக்கு ஆதரவு தராது இருந்த கட்சிகள் எல்லாம் இன்று கழகத்தின் பக்கம் நேசக்கரம் நீட்டுகின்றன. கலைஞரின் பண்பான நடத்தையால், மக்களைக்காக்கின்றபணியிலே அவர் எடுக்கிற நடவடிக்கை கண்டு அவரின் கரத்தை உயர்த்துகிறார்கள் மக்களின் நலன் காக்க ஒரே அணியில் நிற்கிறார்கள்.

தங்களின் உரிமையை — தேவையை கேட்டிடும் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், மருத்துவர்கள், தொழிலாளர்கள் விவசாயிகள் கைது செய்யப்படுகிறார்கள். மாணவர்கள் தாக்கப்படுகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் வீடு தாக்கப்படுகிறது. எதிர் கட்சித் தலைவர் இல்லம் தாக்கப்படுகிறது! சட்ட மன்ற உறுப்பினர் தாக்கப்படுகிறார். பாராளுமன்ற உறுப்பினர் கொலை செய்யப்படுகிறார். எதிர் கட்சித் தலைவரை உளி கொண்டுதாக்கி கொலைசெய்ய முயற்சி நடக்கிறது. மேடைப் பேச்சாளர் உயிரோடு வீடு திரும்ப முடிவதில்லை சவ ஊர்வலத்தைக் கூட வழிமறித்து தாக்குகிற இழிநிலை — இதைத் தட்டிக் கேட்போர் எழுதுவோர் மீது பொய் வழக்குகள். இவையெல்லாம் தான் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கிற நடவடிக்கைகளா? ஒட்டளித்த மக்களுக்கு அரசு காட்டும் நன்றியா இது! போராட்டத்தை ஒடுக்குவதில் காட்டும் அக்கறையைவிடுத்துபோராடுவோரின் கோரிக்கையை கவனித்து ஆவன செய்யலாமல்லவா? ஆட்சியின்போக்கை அலங்கோலத்தை அவலத்தை ஒட்டளித்த மக்கள் கவனிக்கிறார்கள் என்பதை முதல்வர் மறந்திட வேண்டாம்.

நாட்டை ஆள்கிற, மக்களின் வரிப்பணத்தை வாங்குகிற, சட்டத்தை தன் கையிலே ஏற்றிருக்கிற எம். ஜி. ஆரின் போலி வாதத்தால் பொய் குற்றச் சாட்டுகளால், அலட்சியப் போக்கால். ஆணவத்தால், அத்துமீறிய நடவடிக்கைகளால் எடுத்தேன்கவிழ்த்தேன் என்ற பேச்சால், அவருக்கு நண்பர்களாயிருந்தவர்களெல்லாம் பகைவர்களாக இன்று மாறி இருக்கிறார்கள்.

எண்ணத்தால் செயலால் ஒருவர் உயர முடியுமே ஒழிய வெறும் பதவியால், உட்கார்ந்திருக்கிற நாற்காலியால், போர்த்தியிருக்கிற பட்டு சால்வையால் உயர்ந்திட முடியாது!

ஓர் இளந்தளிரின் துயரக் கதை

குருட்டுத்தனமான நம்பிக்கைகளாலும், மடமைச் சடங்குகளாலும் பாதிக்கப்பட்ட ஆயிரமாயிரம் பேர்களில் ஒருத்திதான் சகுந்தலா.

மத்தியப் பிரதேசத்திலிருக்கும் கோண்டியாவில் பிறந்த அவள், இரண்டு வயதுக் குழந்தையாக இருந்த போது, வீட்டுக்கு வெளியே விளையாடிக் கொண்டிருந்தாள்; அப்போது சில கயவர்கள் யாரும் காணாதவாறு அவளைக் கடத்திச் சென்றனர். கடத்திச் சென்றதன் நோக்கம் — காசு பறிப்பதல்ல! இரண்டு முறைகள் திருமணம் ஆகியும் மழலைச் செல்வம் பெறாத ஒருத்திக்குத் தானும் ஒரு குழந்தைக்குத் தாயாக வேண்டும் என்பது நெடுநாள் ஆசை. அந்த ஆசை நிறைவேற வேண்டுமானால் எந்த ஒரு குழந்தையையாவது பலி கொடுக்க வேண்டும் என இருண்ட மனச் சாமியார் ஒருவன் போதித்தான்! அவன் போதனைப்படிதான் குழந்தை சகுந்தலா கடத்திச் செல்லப்பட்டாள்

பலியிடுவதற்கான சடங்குகள் கோயிலில் மும்முரமாக நடந்தன! சகுந்தலாவின் நெற்றியில் குங்குமம் வைத்தார்கள்; கழுத்தில் மாலை சூடினார்கள்! மந்திரங்கள் ஓதினார்கள்......

கடைசியில் —

ஒரு மனித மிருகம் நீண்ட வெட்டரிவாளால் அவளுடைய ஒரு காலையும், கரத்தையும்வேகமாக வெட்டித் தள்ளியது! துண்டிக்கப்பட்ட காலும் கரமும் இரத்த வெள்ளத்தில் மூழ்க அவள் வீறிட்டு அலறியபடியே மூர்ச்சையடைந்தாள்.

அவள் செத்துவிட்டதாக நினைத்த அந்த அறிவுக் குருடர்கள் அவளைப் புகைவண்டி நிலையத்தின் பக்கம் போட்டு விட்டுப் போய் விட்டார்கள்.

மூர்ச்சை தெளிந்த அவள் வெட்டுண்ட வேதனையாலும், அச்சத்தாலும் கத்திக் கதறினாள்; அந்தப் பக்கம் வந்த சில தொழிலாளர்கள் அவள் நிலைமைக் கண்டு பதறியவர்களாய் அவளை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றனர்.

நீண்ட மருத்துவ சிகிச்சைக்குப் பிறகு ஒரு காலும், ஒரு கரமும் இழந்தவளாக அவள் வீடு திரும்பினாள்.

என்றாலும் —

அவள் நம்பிக்கை இழக்கவில்லை; ஊனப் பிறவியாகி விட்டோமே என்று நினைத்து, மூலையிலே சோர்ந்து போய் விடவில்லை...தொடர்ந்து பள்ளி சென்று படித்தாள்... இப்போது அவளுடைய வயது பதினைந்து. எட்டாம் வகுப்பு படிக்கிறாள் அறிவுத் திறனிலும், அதிக மதிப் பெண்கள் பெறுவதிலும் அவள்தான் வகுப்பிலேயே முதன்மையாகத் திகழ்கிறாள்.

வலது கரத்தை இழந்த அவள் இடது கரத்தால் எழுதப் பழகிக் கொண்டாள்.

செயற்கைக்காலும் கரமும்பொருத்தப்பட்ட சகுந்தலா வாழ்க்கையில் தனக்கேற்பட்ட பயங்கரத்தை மறுபடியும் நினைத்துப் பார்க்கும்போது—சமயங்களில் மூர்ச்சை அடைந்து விடுகிறாள்;

'நம் நாடு'

உரிமை பற்றிய விவர அறிக்கை

படிவம் 4

(8-ஆம் விதியைக் காண்க)

வெளியாகும் இடம்:	... சென்னை
வெளியிடும் காலம்:	... வாரம் ஒருமுறை
அச்சிடுபவர் பெயர்:	... மு கருணாநிதி
இந்தியாவின்குடிமகனா?	... ஆம்.
வெளிநாட்டுக்காரர் என்றால் சொந்த நாட்டைக் குறிப்பிடுக	—
முகவரி:	... 150 சூரியநாராயண செட்டி தெரு, சென்னை-600013
வெளியிடுபவர் பெயர்:	... மு. கருணாநிதி
இந்தியாவின்குடிமகனா?	... ஆம்
வெளிநாட்டுக்காரர் என்றால் சொந்த நாட்டைக் குறிப்பிடுக	—
முகவரி:	... 150 சூரியநாராயண செட்டி தெரு சென்னை-600013
ஆசிரியர் பெயர்:	... கருணாநிதி
இந்தியாவின்குடிமகனா?	... ஆம்
வெளிநாட்டுக்காரர் என்றால் சொந்த நாட்டைக் குறிப்பிடுக:	—
மொத்த முதலீட்டில் ஒரு சதவிகிதத்துக்குமேல்பங்கு போட்டுள்ள பங்குதாரர்களாகவோ, கூட்டாளியாகவோ உள்ளவர்களின் பெயர்களும் முகவரியும்	திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக அதன் தலைவர் மு கருணாநிதி அவர்களால் வெளியிடப்படுகிறது.

மு. கருணாநிதியாகிய நான், எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவகையில்கொடுக்கப்பட்ட தகவல்கள் அனைத்தும் உண்மை என்று இதன் மூலம் உறுதி கூறுகிறேன்.

மு. கருணாநிதி

நாள்: 25 2 1979 (வெளியிடுவோரின் கையொப்பம்)

திருமணச் சந்தையிலே...

"மணமகனுக்குப் பெரிய வேலை வாங்கித்தரவேண்டும்...மாப்பிள்ளை பெயருக்கு பெரிய தொகையில் ஈட்டு இன்சூரன்ஸ் பாலிசி எடுக்க வேண்டும்...ஏராளமான செலவில் திருமணத்தை ஆடம்பரமாக நடத்த வேண்டும்..." — பெண் பார்க்க வந்தவர்களின் வற்புறுத்தல்கள் நீண்டு கொண்டே போயின. இத்தனைக்கும் மணமகனுக்கு ஒரு வேலைவெட்டியும் கிடையாது... வேலையில்லாத ஒரு மணமகனை 'வாங்க' இவ்வளவு 'விலை' கொடுக்க வேண்டுமென்றால் வேலையிலிருக்கும் மணமகனுக்கு எவ்வளவு 'விலை' கொடுக்க வேண்டுமோ?

மணமகளின் தந்தை கைகளைப் பிசைந்து கொண்டார். எதையாவது குறைத்துக் கொள்ளும்படி பெண் பார்க்க வந்தவர்களிடம் கெஞ்சினார்.

ஊஹூம்...

அவர்கள் கீழிறங்கி வருவதாகத் தெரியவில்லை.

திருமணச் சந்தையில் தங்கள் பேரத்தை அவர்கள் விட்டுக் கொடுப்பதாக இல்லை.

உள் அறையிலிருந்த மணமகள் அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்தாள். தந்தையின் பரிதாபகரமான கெஞ்சல்கள் ஈவிரக்கமற்று நிராகரிக்கப்படுவதைக் கண்டு சீறியெழுந்தாள். புயலென வெளியே வந்து தன்னைப் பெண் பார்க்க வந்த மணமகனை நோக்கிக் கேள்விகளை அம்புகளெனத் தொடுத்தாள்:

"பெண் பார்க்க வந்த பெருமானே, உங்களுடைய தந்தையின் நிபந்தனைகளை ஒப்புக் கொள்ளச் சித்தமாயிருக்கிறேன் நான் — ஆனால், பதிலுக்கு என் நிபந்தனைகளை நீங்கள் ஒப்புக் கொள்ள வேண்டும். நம் திருமணத்திற்குப் பிறகு நீங்கள் சமைப்பதற்குத் தயாரா? எச்சிற் பாத்திரங்களைக் கழுவத் தயாரா? வெளி உலகில் சென்று நீங்கள் வேலை செய்து சம்பாதிக்கவேண்டாம்... அதையும் நானே பார்த்துக் கொள்கிறேன்...நீங்கள் வீட்டு வேலைகளைச் செய்யத் தயாரா?..."

— மணமகளின் துணிச்சல் மணமகனையும் அவன் வீட்டாரையும் வாய் அடைக்கச் செய்துவிட்டது. எதுவும் பேசாமல் அவர்கள் குனிந்த தலையோடு வெளியேறினார்கள்.

இந்நிகழ்ச்சி ஆந்திர மாநிலத்திலிருக்கும் கோனசீமா என்ற ஊரில் நடந்தது.

மாணவ மணிகளின் குருதி கொதித்தால்...!

சமுதாயத்தை உருவாக்குவதும், சரித்திரங்களை வடிப்பதும் உலகத்தின் சிப்பாய்களாகத் திகழும் மாணவர்கள் ஆவார்கள்! புரட்சியை உண்டாக்குவதில் புத்துணர்ச்சி காட்டி—புலிக் கூட்டங்களாகி நாட்டின் புதிய சமுதாயத்தை அமைப்பதில் மாணவர்கள் புகழ்ச் சின்னங்களாவார்கள்!

பள்ளி முதல் கல்லூரிவரை ஒரு நாட்டின் அறிவுப் பூக்களாக மணப்பவர்கள்மாணவர்கள்! பண்பாடறிந்து நாட்டுப் பற்றும், மொழிப் பற்றும் தம் உள்ளத்திலும், உடலிலும் ஒளி கொண்ட தங்கங்கள்!

ஆன்றோர்கள் — சான்றோர்கள் எழுதியதையும் சொல்லியதையும், படித்ததையும் மனத்திலே தேக்கி மாண்புடைமை ஆக்கி—நாளை மக்கள் நடுவிலே ஒரு தொண்டனாகி—அந்தத் தொண்டிலே தமது உடம்பை தியாகத் தழும்பாக்கி, சுடப்பட்டுசுத்தி கொண்டு அடித்து மெருகு ஏற்றப்பட்ட தங்கமாக! நாட்டின் போர்வாளாக; வீட்டின் நன்மகனாக விளங்குபவர்கள் மாணவர்கள்.

இரா. கென்னடி

மாணவர்கள் கொதித்தெழுந்தால் மன்னர் ஆட்சி என்ன? மக்களாட்சியும் கவிழ்க்கப்படும் என வரலாற்றுப் பாடங்கள் கண்முன்னால் ஓடும் திரைப்படங்களாகக் காட்சி அளிக்கின்றன!

இரண்டாம் உலகப்போர் ஏற்பட்டதன் விளைவாக இட்லரின் சர்வாதிகாரத்தை எதிர்த்து உலகெங்கும் மாணவர் பட்டாளம் மகத்தான புரட்சியை நடத்தியது.

பிரான்சிலே வால்டேர், ரூசோ போன்றவர்களின் சட்டிமுனை எழுத்துக்கள் பதிந்த ஏடுகளைப் படித்து மாணவர்களின் இதயம் எரிமலையாக வெடித்ததன் காரணமாக, மன்னன் 14 ஆம் லூயியின் கோட்டம் அடக்கப்பட்டது! கோட்டை வீழ்த்தப்பட்டது! பிரஞ்சுப் புரட்சி வென்றது.

ஏன்? வங்க தேசம் உருவாவதற்குக்கூட மாணவர்களின் கிளர்ச்சியும், அவர்கள்உள்ளத்தில்தேங்கியிருந்தஉணர்ச்சியும் தான் காரணம் என்றால் மிகையாகாது.

1975-ல் இந்திய நாடு சீர்கெட்டுசர்வாதிகாரப்போக்கை எதிர்த்து—

அன்றைய நாளில் ஜெயப்பிரகாஷ் நாராயண் தலைமையில் இந்திராவின் சர்வாதிகாரத்தைமுறியடிக்கமாணவர்கள் திரண்டனர்!

அதன் விளைவாகவே இந்தியாவில் நெருக்கடி நிலை உருவாக்கப்பட்டு பெருமைக்குரிய தலைவர்கள் அனைவரும் சிறைச்சாலையில் வாடியதை நாடறியும்.

அப்படி வாடிய தலைவர்களுக்கு வான்மழையாக—அவர்கள் வறட்சிக்கு நீர் ஊற்றுக—இங்கே தமிழகத்துத் தானைத் தலைவர் கலைஞர், கருணை–நிதியாக இருந்தது வெள்ளிடை மலையாக விளங்கும்!

இப்படிப்பட்ட காரணங்களால் சமூகத்தைஉயர்வாக்க மாணவர்களால் முடியும் என்றாலும் நல்லவை ஆக்கவும், ஜனநாயகம் பூக்கவும்அல்லவை அழியவும், சர்வாதிகாரம் ஒழியவும் மனத்தில் எண்ணிட வேண்டும் என்பது மாணவர்கள் கொண்ட கொள்கை.

தமிழறிந்த பெரியோர் தமிழ்த் தென்றல் திரு. வி. க., மறைமலையடிகள், பேரறிஞர் அண்ணா, டாக்டர் மு.வ. போன்றோர் புகட்டிச் சென்றக் கருத்துக்களை, புகழுரைகளை, இன்றும் மங்காத–மாசுபடியாத தங்க நிகர் எண்ணங்களாக மாணவர்கள் போற்றி வருகின்றனர்.

ஆனால். இன்று,

மாணவர்கள் மனம் புண்படும் அளவுக்கு தமிழகமெங்கும் அராஜகம் நடக்கிறது; நடந்து வருகிறது! கல்லூரிகளில் புகுந்து காலிகள் கலவரம் செய்தலும், அங்குள்ள பேராசிரியர்களை—தாக்குவதும், தடி கொண்டு அடித்து வன்முறையில் இறங்கி இரத்தம் காணும் களமாகக் காட்சி அளிக்கிறது.

சோடா புட்டி வீச்சினால் சோகமயமாக கல்லூரிகளைச் சுற்றிலும் சிதறுண்ட பூக்களாக கண்ணாடித் தூள்கள் அலங்கரிக்கின்றன.

கத்தி. சைக்கிள் செயின் கொண்டு சில புத்தியற்ற மனிதர்கள் செய்யும் புண்படத் தக்க செயல்களை என்னவென்பது? கல்லூரி விடுதியில் மாணவர்களுக்காக ஆக்கப்பட்ட உணவில்–டியூப் லைட்டை உடைத்து அந்த விஷத் தூள்களைக் கலக்கின்றனர்.

சாராயம் காய்ச்சுவோரின் திருவிளையாடல்களால் மாணவர்களின் இரத்தம் ஆறுகப் போவதை நாடு இன்று கண்டுகொண்டிருக்கிறது;

போலீசின் துணையும்பொய் வேடமாகி காலிகளுக்கு விலை போகின்றது!

அரசுக்கு இதுபற்றிச் செய்தி போயும்–சொல்லியும் 'செவிடன் காதில் ஊதியசங்கு போல' இருக்கிறது!

தியாகராயா கல்லூரி தாக்கப்பட்டது!

பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் தாக்கப்பட்டனர்!

மாநிலக் கல்லூரியில் மாபெரும் யுத்தம் நடந்திருக்கிறது:

இப்படி நாடு முழுக்க நாசச் செயல் என்ற சாயம் மாணவர்கள் மீது பூசப்படுகிறது

நச்சு எண்ணங்கொண்ட நயவஞ்சகக்காலிகளால் பிஞ்சு இதயங்கொண்ட மாணவர்கள் அடிக்கப்படுதல் — அடக்கப்படுதல் – அராஜகம்தொடரப்படுவது – இவைகளை எண்ணினால் மிகவும் வேதனை வருகிறது

முன்னால் இருந்த காமராஜர் ஆட்சியிலும் சரி — பக்தவத்சலம் ஆட்சியிலும் சரி, அராஜகம் நடந்தாலும்மாணவர்கள் தாக்கப்படுகின்ற நேரத்தில் அதற்கு தக்க நடவடிக்கை எடுத்ததை அறிவோம்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் மாணவர்களுக்கு ஆற்றிய அருந்தொண்டு இந்த அகிலம் மறக்கவொண்ணா மாபெரும் சேவையாகும்.

தானைத் தலைவர் கலைஞர் ஆட்சியில் மாணவர்சுட்குத் தீங்குஎன்கிறபோது—அதைக் கண்டு மாணவர்பால் பாசத்தோடு பரிகாரம் தேடித் தந்தார்.

நாட்டுப்பற்று — மொழிப் பற்று இவை இரண்டும் சமுதாயத்தின் கண்கள் என்பதை மாணவர்கள் ஏற்று போர்க்களத்தில் இதுவரை நின்றுள்ளார்கள் என்பதனை மாற்றி இனி அராஜக வழியில் அடக்குமுறைகளைச் சந்திக்க எழுந்து விட்டால் என்ன ஆகும்? ஆனால் அது அண்ணா காட்டிய வழியல்ல என்பதால் மாணவர்கள் பொறுமையுடன் இருந்து வருகின்றனர்.

மாணவர்கட்கு இழைக்கப்படும் கொடுமை நிறுத்தப்பட வேண்டும்; நடந்த நிகழ்ச்சிகளுக்கு விசாரணை வைத்தல் வேண்டும்; தாக்குண்ட மாணவர்களுக்குப் பரிகாரம் செய்திடல் வேண்டும்; மாணவர்கள் கோரிக்கையை மதித்து ஏற்று நிறைவேற்றிட வேண்டும்

"நுண்மாண் நுழைபுலம்
இல்லான் எழில்நலன்
மண்மாண் புனை
பாவையற்று"

என்றதிருக்குறளின்பொருளை மாணவர்கள் — கற்பவர்கள் மட்டுமின்றி — ஆட்சி பீடத்தில் அமர்ந்திருப்போரும் அறிந்து கொள்ள வேண்டும்!

இந்தியின் படையெடுப்பு!

இப்போது நாட்டிலே ஒரு இந்திப் படை எடுப்பு நடந்து கொண்டிருக்கிறது. சுதந்திரம் பெற்ற பிறகு இந்த நாட்டிலே இவ்வளவு வேகமாக இந்தியினுடைய ஏகாதிபத்திய அணிவகுப்பு ஒருபோதும் நடந்ததில்லை

இந்த அணிவகுப்பு பழைய ரோமானியச் சக்கரவர்த்திகளுடைய படைவீரர்களின் அணிவகுப்புபோன்றது. இந்த அணிவகுப்பின் காலடிகளின் கீழே. இந்தி பேசாதவர்களின் உரிமைகள் நசுக்கப்படுகின்றன.

அண்மைக் காலத்தில் இந்தித் திணிப்பு எப்படி ஆரம்பமாயிற்று என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். 1975—ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25-ந்தேதி நாட்டிலே எமர்ஜென்சி பிரகடனம் செய்யப்பட்டது. அந்த எமர்ஜென்சி பிறப்பிக்கப்பட்ட மறுநாள் அதாவது 1975—ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26-ந்தேதி இந்தி பேசாத மக்கள் மீது இன்னொரு எமர்ஜென்சி துவக்கி வைக்கப்பட்டது.

அன்றைய தினம்தான் உள்துறை அமைச்சகத்திலே ஆட்சிமொழி இலாகா என்று ஒரு தனி இலாகாவையே ஏற்படுத்தினார்கள். அந்த இலாகாவினுடைய நோக்கம் என்னவென்றால் எப்படியெல்லாம் இந்தி ஆட்சி மொழியாவதை அதிகரிக்க முடியும் என்பது தான். அந்த இலாகாவின் நோக்கமாகும். அந்த இலாகா இப்போது 61 அதிகாரிகளைக் கொண்ட பலம் பெற்ற இலாகாவாக இருக்கிறது.

இன்னும் சொல்லப் போனால் இந்த மத்திய அரசிலேயே மிகவும் திறமையுடன் செயல்படக்கூடிய ஒரே இலாகா அந்த இலாகாதான்.

1965—ஆம் ஆண்டிலே உற்சாகமிகுந்த ஒரு அதிகாரி ஒரு சுற்றறிக்கையை வெளியிட்டிருந்தார். அதாவது ஜனவரி 26-ந் தேதியிலிருந்து இந்தி மட்டுந்தான் இந்தியாவினுடைய ஆட்சிமொழி என்று அறிவித்திருந்தார். அன்றைய தினம் முதல் தடவையாக இந்தியாவினுடைய கெஜட் "பாரத்கா ராஜ் பத்ரா" என்று இந்தியிலே வெளியாயிற்று. அதற்குப் பிறகு என்ன நடந்தது என்பது உங்களுக்குத் தெரியும். தமிழ்நாட்டிலே இரத்த ஆறு ஓடியது. எட்டுப் பேர் தீக்குளித்துச் செத்தார்கள். தமிழ் மொழிக்காகத் தங்கள் உயிரையே கொடுத்தார்கள். தமிழ்நாட்டைச் சேர்ந்த மத்திய மந்திரிகள் பதவி விலகினார்கள். அதற்குப் பிறகு நிலைமையைச் சமாளிப்பதற்காக ஆட்சி மொழிகள் சட்டத்தை மத்திய அரசு கொண்டுவந்தது. அன்று எப்படி அதிகார வர்க்கம் நடந்து கொண்டு ஒரு பயங்கர சூழ்நிலையை ஏற்படுத்தியதோ அதே போன்ற விஷமத்தனத்தை இந்த ஆட்சிமொழி இலாகா செய்து கொண்டிருக்கிறது என்பதை இந்த அரசின் கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

—முரசொலி மாறன்

(நாடாளுமன்றத்தில் பேசியது)

டாக்டரை நேரில் சந்திக்க

முடியாதவர்களுக்கு வைத்திய ஆலோசனை இலவசம். உங்களுக்கு அல்லது குடும்பத்தில் ஏற்பட்டிருக்கும் வியாதிகளின் முழு விவரங்களை உலகப் புகழ் பெற்ற

பழனி டாக்டர்

எஸ். காளிமுத்து

R.M.P. (IND. V. V. C. A. I. H.)

பழனி — 624601



என்ற விலாசத்திற்கு எழுதி அனுப்புங்கள். எங்கள் ஆலோசனைகளும், சிகிச்சை விபரங்களும் உங்கள் விலாசத்திற்கு இலவசமாக அனுப்பப்படும்.

போன்: 316. 316 ஏ, 420 தந்தி: சித்தர்

இந்திரா பெற்றெடுத்த 'ரா'...

அனைத்துலகையும் தனது ஆளு(ம்) கைக்கீழ் கொண்டு வந்திட வேண்டும் என்னும் வரை கடந்த ஆவல் கொண்டிருந்த அடால்ஃப் இட்லர். கீர்த்தி வாய்ந்த செர்மனி நாட்டின் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தான். வந்தவுடனே தனது ஆவல் நிறைவேற்றத் தற்காக அமைப்பு ஒன்றனைக் கண்டான்.

கெஸ்டபோ என்னும் அந்த அமைப்பினைக் கொண்டு அடால்ஃப் இட்லர் தன் அரசியல் எதிரிகளை ஐரோப்பியர்களை அறிவில் சிறந்தவர்களை ஆற்றல் மிகுந்தவர்களை எல்லாம் கண்காணித்தான். சணக்கெடுத்திடச் செய்தான். அதே போல் கே. ஜி. பி. என்னும் ஓர் அமைப்பினைக் கண்டார் ஸ்டாலின்.

எஃப் பி ஐ. (F.B.I.) என்னும் அமைப்பினை உருவாக்கினார் நிக்சன்!

ஈரான் நாட்டுக்கு முன்பு மன்னராக இருந்த 'ஷா' தன்னைச் சுற்றிவளைத்துக்கொண்ட இடர்ப்பாடுகளை அரசியல்

இந்தியாவின் இருண்ட காலத்தின்போது, தன்னுடைய அரசியல் எதிரிகளைப் பழிவாங்கவும், தீர்த்துக் கட்டவும் இந்திரா காந்தியால் ஏற்படுத்தப்பட்ட ஓர் அமைப்பே, — 'ரா' (RAW)

இந்த அமைப்பு இன்னும் கலைக்கப்படாமல் பழைய போக்கிலேயே ஜனதா ஆட்சியிலும் செயல்படுவதை விவரித்து 'கேதர்நாத் பாண்டே' என்பவர் மார்ச் மாத 'புரோப் (PROBE)' ஆங்கில இதழில் 'RAW FACTS ABOUT THE RAW' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அதன் தமிழாக்கம் இங்கு தரப்பட்டுள்ளது.

தின் கீழ். இயங்கி வந்த 'ரா' மத்திய அரசின் தலைமைச் செயலகத்துக்கு மாற்றப்பட்டுவிட்டது. பிரதமர் தேசாயின் நேரடிப்பார்வையில் — கையில் தான் 'ரா' இயங்கி வரத் தொடங்கியது! இதனை மற்றவர்கள் தெரிந்து கொள்ளக் கூடாது — புரிந்து கொள்ளக் கூடாது என்றும் மற்றவர்கள் எல்லாரும் ஏமாளிகள் என்றும் எண்ணி அவர்கள் கண்களை மறைத்திட ஒரு தந்திரம் கையாளப்பட்டது தேசாய் அவர்களால்! அது என்ன தந்திரம்? 'ரா' அமைப்பின் இயக்குநர் தகுதியிலிருந்து வந்த 'செயலர்' 'இணைச் செயலர்' பதவிக்கு பதவி இறக்கம் செய்யப்பட்டார். பல பிரிவுகளாக இயங்கி வந்த புலனாய்வுத்துறை ஒருசேர இணைந்து செயல்படும் குழுவாக அமைந்த பின்பு அந்தக் குழுவின் தலைவராக இருப்பவர் அவருக்குச் சமமான தகுதியில் — பதவியில் இருக்கும் 'ரா' அதிகாரியை

இன்று செய்வதென்ன?

எதிர்ப்பு வளையங்களைத் தகர்த்து அகற்ற சேவக் அமைப்பினை ஏற்படுத்திக் கொண்டார்.

இவர்களைப் போலவே — அல்ல இவர்களை எல்லாம் விஞ்சும் வகையில் ஓர் ஒற்றர் அமைப்பினைக் கண்டார். இந்தியத் துணைக்கண்டத்தின் பிரதமராக இருந்தபோது திருமதி இந்திரா காந்தி அம்மையார். அவர் தமது ஆட்சிக் காலத்தில் அமைத்து வளர்த்த அமைப்பு 'ரா' என்னும் சொற்சுருக்கம் கொண்டது ஆங்கிலத்தில் 'RESEARCH AND ANALYSIS WING' என்னும் சொற்றொடரில் உள்ள மூன்று சொற்களின் முதல் எழுத்துக்களாம் R. A. W. ஆகியவற்றைக் கூட்டி, 'RAW' என்று அழைக்கப்பெற்றது - குறிக்கப்பெற்றது அந்த அமைப்பு. திருமதி இந்திரா காந்தியின் அரசியல் எதிரிகள் — எதிர்க்கட்சித் தலைவர்கள் — அவரது அமைச்சர் அவையிலேயே இடம் பெற்றவர்கள் — உட்பட, நாடாளுமன்ற உறுப்பினர்கள் — செய்தித் துறையாளர்கள் — கருத்து வேறுபாடும் மாறுபாடும் கொண்டவர்கள் அத்தனைப் பேருடைய வரலாறுகளை — நடவடிக்கைகளை செயல்முறைகளை எல்லாம் கண்காணித்து வரும் பணியினை மேற்கொண்டு செயல்பட்டுவந்தது.

அந்த அமைப்பு எத்துணை வலிமையினையும் வளர்ச்சியினையும் பெற்று வந்தது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு. 1969 - 70 ஆம் ஆண்டுக் காலத்தில் மட்டும் அதற்கெனச் செலவிடப்பட்ட தொகை ரூ 3 கோடியாகும். அதற்கடுத்த ஆறாண்டுக் காலத்தின் முடிவில் செலவிடப்பட்டத் தொகை 50 கோடி ரூபாய்;

மிகப் பெரும் அமைப்பாக பூதாகரமாக வளரத் தொடங்கிய அந்த ரா (RAW) அமைப்பிற்கு பல்வேறுமாநிலங்களில் இருந்தும் மத்தியப் புலனாய்வுத்துறையில் இருந்தும் தருவிக்கப்பட்டோர் தொகை ஏராளம், போதாக்குறைக்கு மொகல்லா என்னும் வட்டாரத் தகவலாளர் குழுவுக்காகச் சேர்த்து கொள்ளப்பட்டோர் எண்ணிக்கை வேறு. அத்துணை பேரையும் சேர்த்தால் 50 000 பேருக்கு மேற்பட்டோர் இருப்பதனை சம்பளப் பட்டியல் சான்று கூறுகிறது.

இத்துணைப் பெரிய ஒற்றர் பட்டாளத்தை இன்று நடத்திச் செல்கின்றவர் என். எஃப் சன் தூக் என்பவர்தான். இந் நாட்டின் துப்பறியும் துறையின் மிக மேல் மட்டத்தில் இருக்கும் அவர் யார் என்று பார்த்தால், இரண்டாகப் பிரிக்கப்படாத பம்பாய் மாநிலத்தின் முதல் அமைச்சராக இருந்தவரும் — இன்று இந்தியத் துணைக்கண்டத்தின் பிரதமராக இருக்கின்ற வருமான திரு. தேசாய் அவர்களின் அந்தரங்க நண்பர்தான் அந்த சன் தூக் என்பவர்

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபத்தேழாம் ஆண்டு மார்ச் திங்களில் அரியணையில் அமர்ந்ததும் ஜனதா அரசு. இந்த அமைப்பினை ('RAW') மாற்றி அமைக்கும் அல்லது அயல் நாட்டு ஊடுருவல்களை — உளவுகளைக் கண்காணித்து அவ்வப்போது தேவைப்படும் செய்திகளை — முன்னெச்சரிக்கைகளை — இரகசியங்களை — தகவல்களை கண்டு — விண்டு சொல்லும் அமைப்பாகச் செயல்படும் வகையில் திருத்தி அமைக்கப்பெறும் என்று எதிர்பார்க்கப்பட்டது. 'நெருக்கடி நிலை'க் காலத்தில், இந்த 'ரா' (RAW) எவ்வளவு கடுமையாக நடந்து கொண்டது என்பதனை இன்று ஆளும் கட்சியாக உள்ளவர்களால் முன்பு எதிர்க்கட்சி வரிசைகளில் இருந்தவர்களால் எதிர்பார்க்கப்பட்டது

இந்தியாவின் இருண்டகாலத்தின்போது 'ரா'வின் இயக்குநராக இருந்த ஆர். என். காவ்.

அவற்றை எல்லாம் ஏனோ அவர்கள் மறந்துவிட்டிருக்கிறார்கள். பத்தொன்பது திங்கள் சிறையிலிருந்து பட்டபாடுகளை எல்லாம் — பாடங்களை எல்லாம் ஏனோ எண்ணியும் கூடப் பார்க்கத் தவறிவிட்டார்கள்! அவர்கள்தாம் திரும்பிப் பார்க்க — கடந்த காலக் கொடுமைகளை நினைத்துப் பார்க்கவில்லை போகட்டும்! புதிய அரசின்கீழ் இயங்கி வரும் அந்த 'ரா' அமைப்பேனும் தனது செயல் முறைகளில் மாற்றம் செய்துகொண்டதா என்றால் இல்லவே இல்லை! மாறாக, வழக்கம்போல், ஆட்சியாளர் கண்ணோட்டத்தில் புறம்பாக — மாறாக — ஐயத்துக்கு இடமாக உள்ளவர்களைக் கண்காணிப்பதிலும் உளவு காண்பதிலுமே முழுக்க முழுக்க — சுறுசுறுப்பாக ஈடுபட்டு வருகிறது. டில்லியில் எங்கெங்குகாணினும் இந்த 'ரா' அமைப்பின் ஒற்றர்கள்தாம்! அவர்களுடைய நடமாட்டம்தான்! அவர்கள் நடமாட்டத்தையும் நடவடிக்கைகளையும் காணவிரும்புவோர் டில்லியில் எந்தப் பகுதியிலேனும் சற்றே நின்று பார்த்தால் தெரியும் — புரியும்! கழுகுப் பார்வையோடு நிற்கின்ற ஒற்றர்களைக் காண முடியும்! அவர்களுக்கு இருக்கின்ற இடப்பட்ட வேலையெல்லாம் யாராக இருந்தாலும் அவரை உளவு பார்ப்பதும் குறிப்பேட்டில் பதிவு செய்வதும்தான்! இந்த உளவுப்பணிகள் — கண்காணிப்புப் பணிகள் நிரம்ப நடைபெறுகின்ற பகுதி. டில்லியில் உள்ள வடக்கு — தெற்கு அவின்யூக்கள்தாம்! அந்தப் பகுதிகள் நாட்டின் மக்கள் பிரதிநிதிகள் எனப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாழ்ந்து வரும் பகுதிகள் ஆகும். நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாழ்ந்து வரும் பகுதிகள் என்பதைவிட நாட்டில் நடைபெற வேண்டிய எந்தத் திட்டங்களும் உருப்பெறும் பகுதிகள் அமைச்சர்கள் உறைவிடமும் அஞ்சல் அகங்களும் பத்திரிகை அலுவலங்களும் அந்தப் பகுதிகளில்தான். 'ரா' அமைப்பின் நடமாட்டமும் அங்கேதான். நடுவண் அரசு அமைச்சர்களின் பாதுகாவலர்களான 'செக்யூரிடி கார்டு'களும், 'ரா' அமைப்பினைச் சார்ந்தவர்களே. இன்று விரைவாகவும் மிகையாகவும் 'ரா' செயல்படத் தொடங்கியது எப்போது? என்றால் ஜனதா அரசின் அமைப்புவரை கோட்டினைக் கடந்து, சரண்சிங் நடந்திடத் தலைப்பட்டபோதுதான் ஏன் என்றால் சரண்சிங்கைக் கண்காணித்திட! தேசாய் அமைச்சர் அவை விட்டு சரண்சிங்கின் வெளியேற்றம் நடைபெற்றவுடனே அது வரை உள்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கி வந்த 'ரா'...

மேலதிகாரம் செலுத்துவது என்பது ஏற்கக்கூடிய கருத்தல்ல 'ரா' அமைப்பின் அதிகாரியைப் பதவிக்குறைப்பு செய்துவிட்டதாக அரசு தரப்பி சொல்லப்பட்டது பொய்? என்பதற்கு வேறு என்ன சான்று வேண்டும்?

இதேபோன்று மற்றுமோர் அப்பட்டமான பொய் என்னவென்றால், 'ரா' அமைப்பு, இப்போது அரசின் கட்டளைப்படி, இந்தியா — அயல் நாட்டுப் பாதுகாப்புப் பணிகளில் தான் ஈடுபட வேண்டும் என்ற கட்டாயத்தில் — கட்டுக்கோப்புக்குள் வந்துவிட்டதாம். இது உண்மையல்ல பொய்என்னும் வகையில் — அதனை உறுதிப்படுத்தும் வகையில். 'ரா' இன்று இயங்கி வருவதெல்லாம். உள்நாட்டுக் கண்காணிப்பிலும். தேசாய் அவர்களுக்கு மாறுபட்ட — வேறுபட்ட கருத்துக் கொண்டவர்களின் பட்டியல் உருவாக்கும் பணியில் ஈடுபடுவதில்தான்!

'ரா' (RAW) அமைப்பின் செயல் முறைகள் — நடவடிக்கைகள் யாவும் கடந்த காலத்தில் இ'ரா'க் காலத்தின் இருண்டவரலாற்றைக் கொண்டது என்பது எல்லார்க்கும் தெரிந்த உண்மை — குன்றின் மேலிட்ட விளக்கு' இருந்தும் 'ரா' பற்றி — அதன் கடந்த கால கடுமையான நடவடிக்கைகள் பற்றி எல்லாம் அறிந்து அறிக்கை வெளியிட அதன் மீது நடவடிக்கை எடுத்திட அல்லது இனியும் அப்படி நடந்திடக்கூடாது என்று கட்டுப்படுத்திட, உதவும் வகையில், ஷா கமிஷன் முன் கோரிக்கை ஏதாவது வைத்ததா இன்றைய அரசு? இல்லை...!

(தொடரும்)

இந்திரா கூட்டத்தை புறக்கணித்த நிருபர்கள்

இந்திரா காந்தியும், கர்நாடக முதலமைச்சர் தேவராஜ்அர்சும் பிப்ரவரி பதினாறும் தேதி ஒரு கூட்டம் நடத்தி அதில் கலந்து கொள்ளும்படி பத்திரிகையாளர்களுக்கு அழைப்பு விடுத்தார்கள்.

ஆனால் அனைத்துப் பத்திரிகையாளர்களும் ஒட்டுமொத்தமாக அந்தக் கூட்டத்தில்கலந்து கொள்ளாமல் அதைப் புறக்கணித்தார்கள்.

இதற்குக் காரணம் என்ன தெரியுமா?

அதற்கு முதல்நாள் நான்கு பத்திரிகையாளர்களை சிக்மகளூரில் போலீசார் மிருகத்தனமாகத்தாக்கியிருக்கின்றனர். அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலே அவர்கள் இந்தப் புறக்கணிப்பைச் செய்தனர்.

(ஸ்டேட்ஸ்மேன் 16-2-79)

கொண்டு வரும்படி ஆணையிட்டார்.

எந்த "மாருதி கார்" பற்றி மக்களிடத்தில் மோசடியானது என்ற உண்மையை எடுத்துச் சொல்ல அந்த இந்தித் திரைப்படம் முந்திக் கொண்டிருந்ததோ அந்தப் படத்தின் 'நெகட்டி'வையும் தயாரித்த படச் சுருள்களையும் சஞ்சய் மாருதிகார்த் தொழிற்சாலைக்கே கொண்டு போனார். படச் சுருள்களை எல்லாம் தீயிட்டு எரித்து தன் வெறுப்பையும் வேதனையையும் தீர்த்துக் கொண்டார்.

தணிக்கைக் குழுவிலிருந்து வெளியிடும் அனுமதி கிடைக்கும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்த படத் தயாரிப்பாளர் நகாதா ஏமாற்றத்திற்கு ஆளாக்கப்பட்டார் எந்தப் பதிலும் வரவில்லை. படச் சுருள்கள் தணிக்கைக் குழுவிலிருந்து அமைச்சர்

நம் நாடு
ஆசிரியர்: மு. கருணாநிதி

ஒரு நாற்காலியின் கதை!

1972-ஆம் ஆண்டு டில்லி மாநகரில் ஒரு விருந்து நடைபெறுகிறது. சர்வாதிகாரப் பாதையிலே நடைபயின்று கொண்டிருந்த அன்றைய பிரதமர் இந்திராகாந்தி அந்த விருந்திலே கலந்து கொள்கிறார்.

இட்லரின் இலட்சியத்தையே தம் கொள்கையாக ஏற்றுக் கொண்டிருந்த இந்திரா காந்தி அந்த விருந்தின் போது அங்கிருந்தவர்களோடு பொழுது போக்காக உரையாடிக் கொண்டிருக்கிறார். அப்பொழுது அமிர்த நகாதா என்பவரைப் பார்த்து 'அரசியலில் நீதி என்பதும் அநீதி என்பதும் இருக்கிறதா?' என்று வேடிக்கையாகக் கேட்கிறார்.

இட்லரின் அரசியல் சித்தாந்தத்தை இந்திரா காந்தியின் வாய்வழிகேட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அமிர்த நகாதாவுக்குத் தூக்கி வாரிப் போட்டது!

பாரெல்லாம் போற்றும் பண்டித நேருவின் மகளா இப்படி அரசியலுக்குப் புதிய சித்தாந்தத்தைப் படைத்துக் கொண்டிருப்பது என்று விருந்திலே இருந்தவர்களெல்லாம் வியந்து போயினர்; அதிர்ச்சிக்கு ஆளாயினர்.

இப்படிப்பட்ட இந்திராவின் கையில் இந்தியா அகப்பட்டுக் கொண்டுள்ளதே! இந்தியாவின் எதிர்காலம் இருண்டு விடாதா? அம்மையாரின் அடாவடி அரசியல் ஆதிக்கத்திலிருந்து இந்தியாவை விடுவிக்க தன்னுடைய பங்காக என்ன செய்யவேண்டும் என்று நகாதா எண்ணிப் பார்த்தார்.

அந்தச்சிந்தனையின்விளைவே "கிசா குர்சிகா எனும் இந்தித் திரைப்படம் எடுக்கவேண்டும் என்பது. அதை தமிழிலே சொல்ல வேண்டுமானால் 'ஒரு நாற்காலியின் கதை'—என்று சொல்லலாம்,

கிராமப்புறங்களில் வசித்து வருகின்ற பாமர மக்களுக்கு இந்திராவின் மோசடி அரசியலை மொத்தமாக எப்படி புரிய வைப்பது என்று எண்ணிப் பார்த்ததன் விளைவே 'ஒரு நாற்காலியின் கதை' திரைப்படமாக உருவாயிற்று.

நல்ல அமைதி நாட்டில் சூழ்ந்திருந்த போது தயாரிக்கப்பட்டதல்ல அந்தப் படம். 1975 ஆம் ஆண்டு இந்திரா அம்மையார் ஆடிக் கொண்டிருந்த தமது நாற்காலியை, ஆடாமல் இருக்கச் செய்திட நாட்டில் நெருக்கடி நிலையைக் கொண்டு வந்த நேரம்.

தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்ள இந்திரா காந்தி 'மிசா' எனும் கொடுமையான சட்டத்தையும் கொண்டு வந்த மயான அமைதி நேரம்

அந்தப் படுபயங்கரமான கால கட்டத்தில்தான் இந்திரா காந்தியின் கொடுங்கோன்மை மிக்க ஆட்சியை நையாண்டி செய்திடும் போக்கில் "ஒரு நாற்காலியின் கதை" எனும் இந்தித்திரைப் படத்தை நகாதா எடுத்து முடித்தார். அந்தத் திரைப் படம் தணிக்கைக்கு அனுப்பப்பட்டது.

அப்போது மத்திய அரசு தகவல், ஒலிபரப்பு திரைப்படம் ஆகிய துறைகளின் அமைச்சராக இருந்தவர் வி.சி. சுக்லா. இந்திரா காந்தியின் எடுபிடியாக இருந்தவர்களில் இவரே அன்று முன்னணியில் இருந்தவர்,

அந்தத் திரைப்படம்வெளி வந்தால் தமது அன்னைக்கு அரசியல் ஆபத்து ஏற்படலாம் என்று எண்ணிய சஞ்சய் காந்தி தமது சேட்டோடியாக விளங்கிய வி. சி. சுக்லாவைக் கூப்பிட்டு அனுப்பினர் அந்த எடுபிடி ஓடோடி வந்தார். தணிக்கைக்கு வந்துள்ள அந்தத் திரைப் படத்தை

சுக்லா மூலம் வெளியே கொண்டு போகப்பட்டுமாருதி தொழிற்சாலையில் சஞ்சய் காந்தியால் எரிக்கப்பட்ட செய்தியும் கேள்விப் பட்டார் நகாதா.

இதுபற்றி உச்ச நீதி மன்றத்தில் முறையிட்டார். உச்ச நீதி மன்றம் தணிக்கைக் குழுவையும் மத்திய அரசு ஒலிபரப்பு திரைப்படத் துறையையும் கண்டித்தது.

சா. க.

இதற்குப் பின்னர் புது டெல்லி "செசன்ஸ் கோர்ட்"டில் சஞ்சய் மீதும் வி. சி. சுக்லா மீதும் வழக்குத் தொடரப்பட்டது.

சதி செய்தல், நம்பிக்கை மோசடி, சொத்தினை அழித்தல், சாட்சியத்தைக் கலைத்தல் மற்றும் இரண்டொரு பிரிவுகளின் மீதும் குற்றம் சாட்டப்பட்டு வழக்கு நடைபெற்றது.

இந்த வழக்கு விசாரணை பதினேழு மாதங்களாக நடைபெற்றது. சஞ்சயும், சுக்லாவும் தங்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுக்களை மறுத்துப் பார்த்தார்கள். விசாரிக்கப்பட்ட சாட்சிகள் கூறிய தகவல்கள் 2500 பக்கங்களுக்குப் பதிவாகியது. இருபக்க வாக்கு வாதங்களுக்கும் பின்னர் நீதிபதி ஓ. என். வோரா தீர்ப்பளித்தார்.

சுக்லா சஞ்சய் காந்தி ஆகியோர் மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டு இருக்கின்றன

அவர்கள் இருவரும் சதி செய்தனர் என்ற முடிவுக்குவருவதற்கான விவரங்கள் அனைத்தும் குற்றச் சாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதைப்போன்று ஒருவர் மற்றொருவர் குற்றத்திற்கு உடந்தையாக இருந்தார் என்ற முடிவுக்கு வர முடிகிறது.

பல்வேறு பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட தண்டனைகளை இருவரும் ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டும். இதன்படி சஞ்சய் காந்தியும், சுக்லாவும் அதிக பட்சமாக இரண்டு ஆண்டு கடுங்காவல் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும்.

ஒரு நாற்காலியின் கதை திரைப படம் அழிக்கப்பட்டு விட்டது. ஆனால் அந்தத் திரைப்படக் கதையை அழித்த கதை மக்கள் முன் அம்பலமாகி விட்டது. இதற்கு முன்பாகவே அழிப்பு வேலைகளில் ஈடுபட்டு வந்த ஆதிக்க வாதிகளின் ஆடிக்கொண்டிருந்த நாற்காலிகள் நொறுங்கி விட்டன. 'நாற்காலி' புகட்டிய நீதியை நாடு புரிந்து கொண்டு விட்டது.

★

கதைக்குக் கிடைத்த கரு!

1972-ஆம் ஆண்டு டில்லியில் ஒரு விருந்து நடைபெற்றது. அந்த விருந்தில் பிரதமர் இந்திரா காந்தியும் கலந்து கொண்டார். அந்த விருந்தில் கலந்து கொண்டவர்களோடு உரையாடிக் கொண்டிருந்த இந்திரா. "நகாதா அவர்களே! அரசியலில் எது தவறு எது சரி என்று சொல்ல முடியுமா? என்று பளிச்சென்று கேட்டாராம்.

இதைக் கேட்ட நகாதா அவர்களுக்கு அதிர்ச்சியானதாம். இந்தக் கொள்கையின் அடிப்படையில்தான் இந்திரா காந்தி சுறுசுறுப்போடு செயலாற்றிக் கொண்டிருக்கிறார்.

இந்த உணர்வே என்னை "கிசா குர்சிகா" திரைப்படத்துக்கான கதையை எழுதத் தூண்டியது என்று செசன்ஸ் கோர்ட்டில் அமிர்த நகாதா அரசுச் சார்பில் சாட்சி கூறுகின்ற போது கூறினார்.

திராவிட முன்னேற்றக கழகத்திற்காக ஆசிரியர் மு கருணாநிதி அவர்களால். அழகிரி அச்சகத்திலே (156 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம்—600013) அச்சிட்டு வெளியிடப்பட்டது. நிர்வாக அலுவலகம் அன்பகம்' 508 அண்ணாசாலை, தேனாம் பேட்டை சென்னை — 600018 தொலைபேசி: 441009